வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 19.01.2022 புதன்கிழமை இதழ் : 45 பக்கங்கள் : 16




## வடக்கு-கிழக்கில் இராணுவம் வைத்துள்ள அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும்!

### பாராளுமன்றில் நேற்று ஜனாதிபதி உறுதி

கொழும்பு, ஜன. 19

“வடக்கு-கிழக்கில் படையினர் வசமிருந்த காணிகளில் 90 வீதமானவை விடுவிக்கப்பட்டுள்ளன. நான் பாதுகாப்பு செயலாளராக இருந்த போதே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டன. எஞ்சிய காணிகளும் எதிர்காலத்தில் விடுவிக்கப்படும்.”

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

9 ஆவது பாராளுமன்றத்தின் 2ஆவது கூட்டத்தொடரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று ஆரம்பித்து வைத்தார். அதன் பின்னர் நிகழ்த்திய

15

## வடக்கு-கிழக்கு எம்.பிக்களின் உதவியை நாடும் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 19

வடக்கு, கிழக்கு மக்களின் நலன் கருதி அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ கோரியுள்ளார்.

அரசியல் பேதங்களை மறந்து அந்த

15

# இந்திய பிரதமருக்கான கடிதம் தூதுவரிடம் நேற்று கையளிப்பு

## தமிழ் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக அளித்தனர்



கொழும்பு, ஜனவரி 19

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரி இந்தியப் பிரதமருக்கு வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகள் எழுதிய கடிதம் நேற்று இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது.

15

## இந்தியாவை நாங்களே பயன்படுத்துகிறோம்!

### சித்தார்த்தன் எம். பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 19

இந்தியப் பிரதமருக்கான கடிதத்தின் மூலம் இந்தியாவை நாங்கள் பயன்படுத்தி தீர்வை அடையவே முயல்கிறோம் என்று புளொட்டின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

டான் தொலைக்காட்சி

15

## இலங்கைக்கு இந்தியா 50 கோடி டொலர் கடன் எல்லை சலுகை!

கொழும்பு, ஜன. 19

இலங்கைக்கு இந்தியா புதிதாக மேலும் 500 மில்லியன் டொலர் கடன் எல்லை சலுகையை வழங்கியுள்ளது.

இந்திய தூதரகத்தின் ஊடக அறிக்கை ஒன்றில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

ஏற்கனவே நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சின்போது பேசப்பட்ட விடயங்களும்

15

ஜனாதிபதியின் உரை ஏமாற்றம்

## தேநீர் விருந்துபசாரத்தை புறக்கணித்த கூட்டமைப்பு

கொழும்பு, ஜன. 19

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட சம்பிரதாயபூர்வமான தேநீர் விருந்துபசார நிகழ்வைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணித்துள்ளனர்.

நேற்று பாராளுமன்றில் இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் தமிழ் மக்களின் இனப்பிரச்னை,

15



தைப்பூச நன்னாளான நேற்று இரவு இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் உலகப் பெரு மஞ்சத் திருவிழா இடம்பெற்ற போது...!

படம்: ஐ.சிவசாந்தன்

## மினி சூறாவளியால் 19 குடும்பங்கள் பாதிப்பு

வடமராட்சி, ஜன. 19

வடமராட்சி - கரணவாய் பிரதேசத்தை நேற்று மினி சூறாவளி தாக்கியதில் 19 குடும்பங்களை சேர்ந்த 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று மதியம் 12 மணி வரையான நிலவரம் தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15

## மின் தடை தொடரும்

கொழும்பு, ஜன. 18

இலங்கையில் தொடர்ந்து மின்தடை ஏற்பட்டுவரும் நிலையில் மின்னுற்பத்தியை மேற்கொள்ளப் போதுமான எண்ணெய் வளம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை மின்சார சபைக்கு, கனிய

15

## காணாமல்போனோர் பிரச்னை ஒரு தரப்புக்கு மட்டுமானதல்ல!



### சகலருக்கும் முடிந்தளவு நீதி வழங்க நடவடிக்கை என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 19

“யுத்தத்தினால் காணாமல்போனவர்கள் தொடர்பான பிரச்னை ஒரு தரப்பினருக்கு மாத்திரம் பொதுவானதல்ல. அனைவருக்கும் எம்மால் முடிந்தளவில் நீதி, நியாயம் வழங்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.”

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி கோட்

15

## கோட்டாபயவின் உரை வெறும் குப்பையே!

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்!

கொழும்பு, ஜன. 19

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை வெறும் குப்பை. அதில் ஒன்றுமே இல்லை. இதை அப்படியே போய் ஜனாதிபதியிடம் கூறுங்கள் என்று, ஜனாதிபதியின் சகோதரரும் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார் என எம். ஏ. சுமந்திரன் கூறியுள்ளார்.

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்த உயர் அதிகாரி ஒருவரை சந்திக்கச் சென்றிருந்தோம். அவுஸ்திரேலியாவில் இருந்து வந்திருந்த நண்பர் ஒருவர் அவ ரைச் சந்திக்க விரும்பினார்.

அந்த அதிகாரி பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற காலத்தில் இவரும் வேறு துறையில் கல்வி கற்றவர்.

நாங்கள் அவரைச் சந்திக்க சென்றிருந்தபோது, அவர் வேறு ஒருவருடனான சந்திப்பில் இருந்தார். அதனால் நாங் கள் இருவரும் அவரது அறைக்கு முன்னால் இருந்த வரவேற்பு அறையில் காத்திருந்தோம். அப்போது அங்கே, தந்தை செல்வாவின் புதல்வர் சந்திரஹாசன் அவரைச் சந்திக்க வந்தார்.

அவர் முன் அனுமதி பெற்றிருக்கவில்லை. இதனால் நாங் கள் முதலில் அவரைச் சந்திக்க உள்ளே சென்றபோது சந்திர ஹாசன் வரவேற்பு அறையில் காத்திருந்தார்.

உள்ளே சென்ற நாங்கள் மாவட்டத்தின் அப்போதைய நிலைமைகள், தேவைகள் குறித்து கதைத்துக்கொண்டிருந்த போது, நண்பர், பேராதனை பல்கலைக்கழ வாழ்க்கை, அப்போது அவர்களோடு படித்த நண்பர்கள் என்று பழைய விடயங்களுக்கு சென்று விட்டார். நேரம் நீண்டுவிட்டது. எங்களுக்கோ வெளியே சந்திரஹாசன் காத்திருப்பதும் மறந்து போய்விட்டது.

நீண்ட நேரத்திற்கு பின்னர்தான் அது ஞாபகத்திற்கு வர, நான் தடுமாறி, 'ஐயோ... வெளியே தந்தை செல்வாவின் புதல்வர் சந்திரஹாசன் காத்திருக்கிறார்' என்றேன்.

அப்போது அவர் கேட்ட கேள்வி எனக்கு தூக்கிவாரிப் போட்டது.

தந்தை செல்வாவா, யார் அது?

பேராதனை பல்கலைக்கழகம் இலங்கையின் முதல்நிலை பல்கலைக்கழகம். அங்கு கல்வி கற்று யாழ்ப்பாணத்தில் உயர் பதவியில் இருந்த ஒருவருக்கு, தந்தை செல்வா என்ற பெயர் தெரிந்திருக்கவில்லை. எஸ்.ஜே. வி. செல்வநாயகம் என்றது தெரிந்திருந்தது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று, மாண வர் தலைவராக இருந்து பின்னர் அரசியலுக்கு 'கொண்டு வரப்பட்ட' கஜேந்திரன், அவ்வப்போது தெரிவிக்கின்ற கருத்துக்களை கேட்கின்றபோது, அந்த உயர் அதிகாரி யோடு ஒப்பிட்டுப் பார்த்து இந்த ஊர்க்குருவி சமாதானப் படுவது வழக்கமாகிவிட்டது.

பழைய சம்பவங்கள் பற்றிய அறிவுதான் அவர்களுக்கு இல்லை என்றால், தமது காலத்தில் தம்மைப்பற்றிய சம்ப வங்களையே மறந்துவிடும் அவர்களின் நிலையை அறிகின்ற போது, தமிழ் படம் ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது.

நடிகர் சூர்யா நடித்து மாபெரும் வெற்றிபெற்ற திரைப் படம் 'கஜினி'.

அந்தப் படத்தில் அவருக்கு ஞாபகமறதி. அதனால் அவர் தன்னோடு சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் தனது உடலி லேயே எழுதி வைத்திருப்பார்.

தன் காதலியை கொன்றவரை பழிவாங்குவதற்காக அவர் ஒவ்வொரு சம்பவங்களையும் எழுதி வைத்திருந்து பழி வாங்குவர்.

அவருக்கு இருப்பதுபோன்ற நோய், நமது தலைவர்கள் சிலருக்கும் இருக்கிறதோ என்று எண்ணாமல் இருக்கவும் முடியவில்லை.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து நடாத்திய வைபவத்தில் உரையாற்றிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் கஜேந்திரன், மாநாட்டில் படுகொலை செய்த குற்றவாளி கள் இதுவரை தண்டிக்கப்படவில்லை என்று கூறியிருந்த தற்கு அப்புக்குட்டி அண்ணை பதிலளித்திருந்தார்.

ஆனால், அந்த வைபவத்தில் அவர் தெரிவித்திருந்த மற்றுமொரு விடயத்தை அப்படியே கீழே தருகின்றேன்.

'... நீதியரசராக இருந்த கைக்கூலியான விக்னேஸ்வ ரனைத் தமிழர்களில் ஒருவராகக்காட்டி, தமிழ் சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களும்கூட அவரை ஒரு நல்லவர், வல்லவர் என்று எங்களுடைய மக்களுக்குக் காட்டி அவரை தமிழ் மக்களுக்கு துரோகம் இழைக்க துணை நின்றனர். புலம்பெயர் தேசங்களில் இருந்தும் அவருடைய துரோகத்தனம் தெரிந்துகொண்டும் அவருக்குத் துணை நின்றனர்..' - இதுவே விக்னேஸ்வரன் குறித்து கஜேந் திரன் தெரிவித்திருந்தவை.

இதே விக்னேஸ்வரன் கூட்டமைப்பிலிருந்து வெளியே வந்ததும் அவரை தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடியவர்கள் யார் என்பதை தமிழ் மக்கள் இவ் வளவு விரைவாக மறந்துவிடுவார்கள் என்று அவர் நினைப் பது, அவருக்கு மறதி வியாதி உண்டா அல்லது, தமிழ் மக்களுக்கு அந்த வியாதி இருக்கிறது என்று அவர் நினைக் கிறாரா என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை.

- ஊர்க்குருவி

# பயங்கரவாத தடை சட்டத்தின்கீழ் கைதானோர்விடுதலைக்குஉதவுக

## ஐரோப்பிய தூதரிடம் ரிஷாத் எம். பி. கோரிக்கை

மன்னார், ஜன. 19

"பயங்கரவாதத் தடைச் சட் டத்தின் கீழ் கைது செய்யப்பட் டுள்ள சிறைக் கைதிகளின் நல னுக்கு தமது ஒத்துழைப்பை தொடர்ந்தும் வழங்க வேண் டும். அவர்களின் விடுதலைக் கும் உதவ வேண்டும்.", என்று அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதி யுதீன் ஐரோப்பிய ஒன்றியத் தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் செய்பியை வலியுறுத் தியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் செய்பியை அண்மை யில் சந்தித்து கலந்துரையாடிய ரிஷாத் பதியுதீன் பல்வேறு விட யங்கள் தொடர்பில் பேசினார் என்று ஐரோப்பிய ஒன்றியத் துக்கும் இலங்கைக்குமான நீண்டகால உறவு குறித்து பாரா ளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதி யுதீன் இந்தச் சந்திப்பின் போது நினைவுபடுத்தியதுடன், கடந்த காலங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவியதற்காக தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மூலம் கைது செய்யப் பட்டுள்ள சிறைக் கைதிகளு டைய விடுதலை தொடர்பில், ஐரோப்பிய ஒன்றியம் அதிக அக்கறை செலுத்துகின்றது.

பயங்கரவாத தடைச் சட் டத்தின் மூலம் அநியாயமாகக் கைது செய்யப்பட்டு, சிறையிலி ருக்கின்ற தமிழ், முஸ்லிம் இளை ஞர்கள் பலர், தமது கைதை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்குக்கூட பொருளா தார வசதிகள் இன்றி மிகவும் சிரமப்படுகின்றனர். பொருளா தார ரீதியில் அவர்களின் குடும் பங்கள் கஷ்டப்படுகின்றன.

இதனால், அவர்களுக்கான நியாயம் கிடைப்பது கூட அரி தாகவுள்ளது.எனவே, கடந்த காலங்களைப் போன்று ஐரோப் பிய ஒன்றியம், பாதிக்கப்பட் டுள்ள கைதிகளின் நலனுக்கு தமது ஒத்துழைப்பை தொடர்ந் தும் வழங்க வேண்டும்' எனவும் அவர் கேட்டார். (ஐ)

### கிண்ணியா தவிசாளர் தெரிவில் பலத்த போட்டி

திருமலை, ஜன. 19

திருகோணமலை மாவட் டம், கிண்ணியா நகர சபை மற் றும் பிரதேச சபை ஆகிய இரு சபைகளின் வரவு - செலவுத் திட்டங்கள் தோல்வியடைந்த மையால் புதிய தவிசாளர்கள் தெரிவுகள் இடம்பெறவுள்ளன.

இது தொடர்பில் வர்த்தமானி ஊடாக அறிவித்தல் விடுக்கப்பட் டுள்ளதாக, கிழக்கு மாகாண உள் ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் தெரிவித்தார்.

இதனால் குறித்த இரு சபை களின் புதிய தவிசாளர் தெரிவு, நாளை வியாழக்கிழமை உரிய சபைகளின் மண்டபத்தில் இடம் பெறவுள்ளன. கிண்ணியா நகர சபையின் தவிசாளர் தெரிவு, காலை 9.30 மணிக்கும் கிண்ணியா பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு, முற் பகல் 11 மணிக்கும் இடம்பெற வுள்ளதாக வர்த்த மானி அறிவித் தல் மூலம் குறிப் பிடப்பட்டுள்ளது.

# சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம்!

யாழ்ப்பாணம், ஜன. 19

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார் ஆலயத் தின் மகாகும்பாபிஷேகம் எதிர் வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.32 - 11.22 மணி வரை இடம்பெறவுள்ளது.

மகா கும்பாபிஷேக கர் மாரம்பம் இன்று புதன்கிழமை காலை 5.30 மணிக்கு ஆரம் பமாகின்றது. இதைத் தொடர்ந்து, காலை 6.45 மணிக்கு ஆலயத்தின் மேற்குப் புற வாசல் அலங்கார வளைவு திறப்பு விழாவும், கலாசார மண்டப புகுவிழாவும் இடம் பெறும்.

நாளை வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு "பஞ்சதள நாயகன்" இறுவட்டு வெளி யீட்டு விழா நடைபெறும். 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

மறுநாள் கும்பாபிஷேக பெருவிழாவில் அனைவரையும் சுகாதார விதிகளை பின்பற்றி பங்கேற்குமாறு ஆலய நிர் வாகம் அறிவித்துள்ளது. (ஐ)

# பிரியந்தகுமாரவின் குடும்பத்திற்கு 100,000 அமெரிக்க டொலர் வழங்கல்

கொழும்பு, ஜன. 19

பாகிஸ்தானில் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட இலங்கையரான பிரியந்த குமா ரவுக்கு வழங்கப்படவேண்டிய நிதி அவரது மனைவியின் கணக்கில் வரவு வைக்கப்பட் டுள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் உள்ள சியல்கோட் வர்த்தக சமூகம் சேகரிக்கப்பட்ட 100,000 அமெரிக்க டொலர்கள் அவ ரது மனைவியின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக குறித்த ருவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரியந்த குமார படுகொலை செய்யப் பட்டபோது பணிபுரிந்த ராஜ்கோ நிறுவனத்தில் இருந்து பிரியந்தகுமாரவின் மாதாந்த சம்பளமான, 2000 அமெரிக்க டொலர்களையும் அவரது மனைவியின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது. பிரியந்த குமாரவின் மனை விக்கு 10 வரு டங்களுக்கு இவ் வாறு சம்பளம் வழங்கப்பட வுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது. (அ)

# அனல் மின் நிலையத்தையும் இந்தியாவுக்கு வழங்கவேண்டிய இக்கட்டு நிலையில் அரசு

## தொழில்சங்கம் கடும் சாடல்

கொழும்பு, ஜன. 19

அனல் மின் நிலையத்தையும் இந்தி யாவுக்கு வழங்கவேண் டிய இக்கட்டான நிலைக்கு மின்சக்தி அமைச்சு தள்ளப்பட் டுள்ளது என மின்சாரத்துறை சேவை தொழில்சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாப னம் மின்சக்தி அமைச்சுக்கு மின் விநியோ கத்தை மட்டுப்படுத்தியுள்ள தால் மின் உற்பத்தி மற்றும் மின் விநியோக கட்டமைப்பில் பாதிப்பு ஏற்பட்டுள்ளன.

டொலர் நெருக்கடி காரண மாக எரி பொருள் விநியோகம் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது என வலுசக்தி அமைச்சர் குறிப் பிட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது.

மின்சார சபை டொலர் வழங்கினால் தான் எரிபொருள் விநியோகிக்க முடியும் என இலங்கை பெற்றோலிய கூட் டுத்தாபனம் குறிப்பிட முடி யாது. நாட்டில் எரிபொருள் இறக்குமதி மற்றும் எரிபொருள் விநியோகத்துக்கான உரிமை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் துக்கு மாத்திம் உண்டு.

தேசிய மின் விநியோக கட்டமைப் பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து அக் கறை கொள்ளாமல் மின் சக்தி அமைச்சரும்,வலுசக்தி அமைச் சரும் முரண்பட்டுக் கொள்கி றார்கள். மின் மற்றும் எரி பொருள் விடயதானம் குறித்து இருவருக்கும் தெளிவில்லை என்றே குறிப்பிடவேண்டும்.

மின் உற்பத்தி மற்றும் மின்விநியோ கத்துக்கு தேவை யான எரிபொருளை இந்தியா வின் ஐ.ஓ.சி நிறுவனத்திடமி ருந்து பெற்றுக் கொள்ள எதிர் பார்த்துள் ளோம் என மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே குறிப்பிட்டுள்ளமை பாரதூர மானது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
19.01.2021 புதன்கிழமை
பிலவ வருடம், தை 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## ஜனாதிபதியின் உரை - ஆச்சரியமில்லை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அக்கிராசன உரையில் - தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகள் தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை. அவர் சில விடயங்களை கூறுவாரென்று எதிர்பார்ப்புக்கள் நிலவின. அவ்வாறானவர்கள் ஏமாற்றமடைந்திருக்கின்றனர். ஆனால், தமிழர் தரப்பில் அவ்வாறான எதிர்பார்ப்புக்கள் இருக்கவில்லை. கூட்டமைப்பிடமும் அவ்வாறான எதிர்பார்ப்புக்கள் இருந்ததாகத் தெரியவில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆரம்பத்திலிருந்தே தேசிய இனப்பிரச்னை தொடர்பில் அமைதியாகவே இருந்துவருகின்றார். அவரைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுக்கு பொருளாதார பிரச்னைகள்தான் இருக்கின்றன. அவரது பதவியேற்பின் போதும் இவ்வாறானதோர் அபிப்பிராயத்தையே வெளியிட்டிருந்தார். அவர், முதலாவது வெளிநாட்டு விஜயமாக, இந்தியாவுக்கு சென்றபோதும், அங்கு ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு, பொருளாதார பிரச்னையையே பதிலாக முன்வைத்திருந்தார்.

ஆனால், வடக்கு - கிழக்கை வரலாற்று வாழ்விடமாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் பொருளாதாரப் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டுமாயின், அதற்கு முதலில் அதிகாரப் பகிர்வு இடம்பெற வேண்டும். ஆகக் குறைந்தது, அரசியல் யாப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தையாவது, முழுமையாக அமுல்படுத்த வேண்டும். ஒரு மக்கள் கூட்டம் தங்களுக்கான அபிவிருத்தியை தீர்மானிக்கும் அதிகாரமிருந்தால் மட்டுமே, அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற முடியும்.

எனவே, ஜனாதிபதியின் உரை தமிழ் மக்களுக்கு ஏமாற்றமான ஒன்றென்று கூறினால் - அது தவறானது. ஏனெனில், ஜனாதிபதி கோட்டாபய அரசியல் தீர்வை வழங்குவார் என்னும் நம்பிக்கை எவரிடமும் இல்லை. இதன் காரணமாகவே, தமிழ் கட்சிகள் இந்திய பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கின்றன. அதேபோன்று அமெரிக்காவின் ஆதரவை கோருகின்றனர். யுத்தமில்லாத கடந்த பன்னிரெண்டு வருடங்களில், அரசாங்கத்தை நோக்கி தமிழர் தரப்புக்கள் சென்றதைவிடவும் சர்வதேசத்தை நோக்கி சென்றதுதான் அதிகம். ரணில் - மைத்திரி ஆட்சிக்காலம் இதில் ஒரு விதிவிலக்கு.

ராஜபக்ஷக்களை பொறுத்தவரையில் சிங்கள மக்களின் வாக்கு வங்கியே பிரதானமானது. அதனை பாதுகாப்பதற்கு என்ன செய்ய வேண்டுமோ, அது மட்டும்தான் அவர்களுக்கு முக்கியமானது. ஏனெனில், தமிழ் மக்கள் எக்காரணம் கொண்டும் ராஜபக்ஷக்களை ஆதரிக்கப் போவதில்லை. இந்த அடிப்படையில் சிந்தித்தால், சிங்கள மக்களை பொறுத்தவரையில், பொருளாதார சரிவுதான் ஒரேயொரு பிரச்னை. அதனை சரிசெய்துவிட்டால், அதன் பின்னர், சரிந்த செல்வாக்கை மிகவும் குறுகிய காலத்தில் நிமிர்த்திவிட முடியும்.

ஒருவேளை ஜனாதிபதி அரசியல் தீர்வு தொடர்பில் பேசியிருந்தால்தான், தமிழர் தரப்புக்கள் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். எனவே கோட்டாபய ஏமாற்றிவிட்டார் என்று கூறினால் அது தவறானது. அவர் ஏமாற்றவில்லை. அவரது முன்னைய நிலைப்பாட்டை மீளவும் உரத்து பேசியிருக்கின்றார். விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு பின்னர், அரசியல் பிரச்னையென்று ஒன்றில்லை என்பதே அவர்களின் நிலைப்பாடு.

# பிரிட்டனுக்கே ‘அபகீர்த்தியை’ ஏற்படுத்தும் இலங்கை இராணுவ அதிகாரிகள் மீதான தடை கோரிக்கை!

அலசுவது இராஜதந்திரி

இலங்கையின் இராணுவ தளபதிகள் இலங்கை வருவதற்கு தடை விதிப்பதில் பிரிட்டன் தயக்கம் காட்டுவதாக பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர் எலியட் கொல்பெர் கவலை வெளியிட்டுள்ளார். அத்துடன், அமெரிக்கா உட்பட உலக நாடுகள் பலவும் இலங்கை இராணுவத்தில் தளபதிகள் தரத்தில் இருப்போருக்கு அந்த நாடுகளுக்குள் நுழைய தடை விதித்துள்ள தருணத்தில் பிரிட்டன் மட்டுமே இலங்கை இராணுவத் தளபதிகள் பிரிட்டனுக்குள் நுழைவது சம்பந்தமாக எவ்வித தடையையும் கொண்டு வராதுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இன்றைய முப்படைகளும் இலங்கையில் பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டவையாகும். ஆயுதப் படைகளுக்கு ஆட்சேர்ப்பது மட்டுமல்ல. முப்படைகளுக்குமான முகாம்கள், விமான மற்றும் கடற்படை தளங்கள் என்பவைகூட பிட்டிஷாரின் ஆட்சிக்காலத்திலேயே இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்தன.

திருகோணமலையின் சீனன்குடாவில் இயற்கையாகவே அமைந்துள்ள துறைமுகம் மற்றும் அதனோடு இணைந்த விமானப் படைத்தளம் உட்பட இராணுவ தளங்கள் அனைத்தினதும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் பிரட்டிஷார் காலத்திலேயே இலங்கையில் உருவாக்கப்பட்டன.

இலங்கை இராணுவத்தில் தளபதிகளாக ஆரம்பத்தில் பணியாற்றியவர்கள் ஆங்கிலேயர்கள். இவர்களைத் தொடர்ந்து இலங்கை இராணுவத்தின் முதலாவது இலங்கையரான தளபதியாக பதவி வகித்தவர் மேஜர் ஜெனரல் அன்ரன் முத்துகுமார் என்ற தமிழரே என்பது குறிப்பிடத்தக்கது. இதுதவிர, இலங்கை கடற்படையின் முதலாவது இலங்கையரான தளபதி கூட அட்மிரல் ராஜன் கதிர்காமர் என்ற, மறைந்த இலங்கை வெளிவிவகார அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமரின் மூத்த சகோதரரே என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுதவிர இலங்கை விமானப்படையிலும் ஆரம்ப காலத்தில் நிறையவே தமிழர்கள் விமானிகளாகவும் உயர் அதிகாரிகளாகவும் பணியாற்றியிருந்தனர். ஆயினும், இலங்கை சுதந்நதிரமடைந்த பின்னர் ஆயுதப்படைகளுக்கு உள்ளும் இனவாதம் உருவாகி தமிழர்கள் புறந்தள்ளப்படுகின்ற சூழ்நிலைகளே மேலோங்கியிருந்தன.

இத்தகைய இனவாத போக்கே நாளடைவில் ஆயுதப்படைகளையும் 99 சதவீதம் பெரும்பான்மை சிங்கள இனத்தவர்களை கொண்டதாக மாற்றமடைய வைத்திருந்தது.

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கையின் ஆயுதப்படையினர்மீது கடுமையான குற்றச்சாட்டுகள் ஆதாரங்களுடன் முன்வைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள அதேசமயம் கடற்படையைச்சேர்ந்த சந்தன ரத்நாயக்க என்பவர் திருகோணமலையில் பதினொரு மாணவர்களின் மரணங்கள் தொடர்பாக அமெரிக்காவுக்குள் நுழைய தடை விதிக்ப்பட்டிருந்தது. அத்துடன், சுனில் ரத்நாயக்க என்ற இராணுவ சிப்பாய் ஒருவர் மட்டுவில் பகுதியில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டமை தொடர்பாக அமெரிக்காவுக்குள் நுழைய தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இவற்றைப் பின்பற்றியே பிரிட்டனுக்குள்ளும் இலங்கை ஆயுதப் படைத் தளபதிகள் நழைவதற்கு தடைவிதிக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் எலியட் கொல்பர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரிட்டன் இலங்கை ஆயுதப்படையினருக்கு பயிற்சியளிப்பதில் நீண்ட கால தொடர்பை கொண்டுள்ளது. இந்தப் பயிற்சியை வழங்குவதில் பிரிட்டனின் உலகப் பிரசித்திபெற்ற இராணுவக் கல்லூரியான றோயல் மிலிட்டரி சான்ட்ஹேஸ்ட் கல்லூரி முக்கியமானதாகும். (Royal Military Academy Sandhust). இக்கல்லூரியிலிருந்தே நீண்டகாலமாக இலங்கையின் பல இராணுவ அதிகாரிகள் தமது சேவைக்காலப்பகுதியில் இராணுவ பயிற்சிகளை பெற்றவர்களாக இருக்கின்றனர்.


இத்தகைய பின்னணியில் இலங்கை இராணுவ அதிகாரிகள் பிரிட்டன் வர தடை விதிக்கப் பட வேண்டுமென கோரப்பட்டிருப்பது மறுபுறத்தே பிரித்தானிய இராணுவத் துறைக்கே கன்னத்தில் அறைந்தது போன்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளதோ என்றே எண்ணத்தோன்றுகின்றது.

ஏனெனில், பிரிட்டனில் சிறப்பு பயிற்சி பெற்ற இலங்கை அதிகாரிகள் பலரும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக குற்றச்சாட்டப்பட்டுள்ளனர். இந்த அதிகாரிகளை பிரட்டன் வர பிரிட்டிஷ் அரசு அனுமதி மறுப்பதன் மூலம் ‘தாம் வழங்கிய பயிற்சிக்கு அபகீர்த்தியை’ தாமே ஏற்படுத்திக்கொள்வதா என்ற உணர்வை பிரிட்டிஷ் பாதுகாப்புத்துறை கொண்டுள்ளதோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

எது எப்படியிருந்தபோதிலும் அமெரிக்காவோ அல்லது பிரிட்டனோ வடக்கு - கிழக்கு யுத்தம் இடம்பெற்றபோது “தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விட்டது“ போன்றே நடந்து கொண்டன. ஒருபுறம் வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு அரசியல் தீர்வு பற்றி குறிப்பிட்ட அதேசமயம் மறுபுறத்தே விரிவான ஆயுதப்பயிற்சி, ஆயுத விற்பனை என்பவற்றில் அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவை ஈடுபட்டிருந்தன.

இந்நிலையில் இலங்கை இராணுவ தளபதிகள் பிரிட்டனுக்குள் நுழைவதை தடுப்பதில் பிரிட்டிஷ் அரசு நீதி , நியாயத்தோடு எவ்வளவு தூரம் உறுதியான முடிவுகளை எடுக்கும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முதலீடு சம்பந்தமான புதிய முயற்சிகளில் இன்று ஈடுபடலாம். தந்தை வழி உறவினர்களால் நன்மைகள் ஏற்படும்.

**இடபம்**
குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு நன்மை நிகழும். பெரியவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். வீண் பயம் தீரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். உங்களின் செயல் திறன் கூடும்.

**மிதுனம்**
சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். மகிழ்ச்சியான நாள். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள்.

**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சகபணியாளர்களிடம் இணக்கமாக நடந்து கொண்டு நன்மை காண்பீர்கள். வெளியூர், வெளிநாட்டில் உள்ள நண்பர்கள் உங்களுக்கு உதவுவர்.

**சிம்மம்**
குடும்பத்தில் ஒருவருக்கு திருமணம் நிச்சயமாகும். பணவரவு உண்டு. கணவன் மனைவி இடையே ஏற்பட்டிருந்த வருத்தங்கள் அகலும். வாழ்க்கைத் துணையால் நன்மை வரும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி**
இன்று நிதி பற்றிய முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். சகோதர வகையில் எதிர்பார்த்த விஷயம் தாமதமாகலாம். குடும்பத்தினர் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவீர்கள்.

**துலாம்**
நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கவலைகள் தீரும். வாழ்க்கைத்துணையின் செயலால் மகிழ்ச்சி உண்டாகும்.

**விருச்சிகம்**
வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் முன்பைவிட சற்றே அதிகரிக்கும். உங்களது முனைப்பான முயற்சியால் புதிய விஷயம் ஒன்று சாதகமாக முடியும். நீண்ட நாளாக எதிர்பார்த்து காத்திருந்த செய்தி வரும்.

**தனுசு**
பேச்சிலும் செயலிலும் கவனமாக இருந்தால் பிரச்னை வராது. கணவன் மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். எதிர்பாராத செலவு வரக்கூடும். வீண் பேச்சைத் தவிர்க்கவும்.

**மகரம்**
உங்களது பேச்சில் நேர்மறை எண்ணம் பிரதிபலிக்கும். கடன் வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது. பயம் நீங்கும். பணி குறித்த நல்ல செய்தி ஒன்று வந்து உங்களை மகிழ்விக்கும்.

**கும்பம்**
சோம்பலைத் தவிர்ப்பது நல்லது. பழி வராமல் காக்கவும். அதிர்ஷ்டம் வரும். குழந்தைகளின் வாழ்வில் மகிழ்ச்சி உண்டாகும். லாபம் கூடும். உடல்நலத்தில் கவனம் தேவை.

**மீனம்**
திடீர் சுபச்செலவுகளால் உங்களின் கையிருப்பு குறையக்கூடும். தாயின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். வாகனம் வாங்கும் யோகம் உண்டு. புதிய விஷயம் கற்பீர்கள்.

# குடியரசு தின விழாவில் தமிழக ஊர்தி பங்கேற்பதை உறுதி செய்யுங்கள்

## ஸ்டாலினிடம் பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

சென்னை, ஜன. 19

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமரிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு குடியரசு தின விழாவில்தமிழ்நாட்டின் சார்பாக அலங்கார ஊர்தி பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டும் என அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இந்த ஆண்டு உள்ள குடியரசு தின விழாவில், கொரோனா பெருந்தொற்று உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்னிட்டு பங்கேற்கும் மாநிலங்களின் எண்ணிக்கை 12ஆக குறைக்கப்பட்டு உள்ளதாகவும், தமிழ்நாடு அரசின் சார்பில் பங்குபெற



இருந்த அலங்கார ஊர்திக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும், செய்தி வந்துள்ளது வருத்தத்தினை அளித்துள்ளது.

இந்தியாவின் பிரதானமான நான்கு நகரங்களில் சென்னை ஒன்று என்பதையும், இந்தியாவிலுள்ள மிகப்பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்று என்பதையும், தமிழ்நாட்டின் கலை, கலாச்சாரம், பண்பாடு, விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு ஆகியவற்றை மாநில அரசு அதிகாரிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் மத்திய அரசு அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறி, அதிகாரிகள் மட்டத்திலேயே அவற்றை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முதலமைச்சர், பிரதமரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வருகின்ற குடியரசு தின விழாவில் தமிழ்நாட்டின் சார்பாக அலங்கார ஊர்தி பங்கேற்பதையும், ஹஜ் புனித யாத்திரைக்கான விமான நிலையப் பட்டியலில் சென்னை சேர்க்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும்.

- இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# 'நீட்' தேர்விலிருந்து தமிழகத்துக்கு விலக்கு அளிக்கப்பட வேண்டும்!

## அனைத்துக் கட்சி குழு அமித் ஷாவிடம் கோரிக்கை

சென்னை, ஜன. 19

தமிழகத்துக்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கக் கோரி தி.மு.க. எம்.பி., டி.ஆர். பாலு தலைமையிலான தமிழக அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் டில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவைச் சந்தித்தனர்.

தமிழகத்துக்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கக் கோரி மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவைத் தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சிக் குழுவினர் சந்தித்துப் பேசினர். திமுக எம்.பி., டி.ஆர்.பாலு தலைமையில் சென்ற இந்தக் குழுவில், காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஜெயக்குமார், ம.தி.மு.க. சார்பில் வைகோ, அ.தி.மு.க. சார்பில் நவநீதகிருஷ்ணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் ரவிக்குமார்,



பாமக சார்பில் ஜி.கே.மணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடராஜன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ராமசந்திரன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். உள்துறை அமைச்சருடனான சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திமுக எம்.பி., டி.ஆர். பாலு, "முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த நீட் விலக்கு தொடர்பான அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி, தமிழகத்துக்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கக் கோரி மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவைச் சந்தித்து கோரிக்கை மனுவை அளித்துள்ளோம்.

கடந்த 3.3.2007ஆம் ஆண்டு நீட் தேர்விலிருந்து தமிழகத்துக்கு விலக்கு அளித்து குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்கியதைச் சுட்டிக்காட்டி, அதே போலத் தமிழகத்துக்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என வலியுறுத்தினோம். இது தொடர்பாக சுகாதாரத்துறை மற்றும் கல்வித்துறை அமைச்சர்களுடன் கலந்து பேசி உடனடியாக முடிவெடுத்து, என்ன முடிவெடுக்கப்படுகிறது என்பது குறித்து, தமிழக முதல்வரிடம் தெரிவிப்பதாக உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

# குடியரசு தினத்தில் தமிழ்நாடு ஊர்திக்கு அனுமதி இல்லை; பாதுகாப்புத்துறை

சென்னை, ஜன. 19


இந்திய குடியரசு தின விழா அலங்கார ஊர்தி அணிவகுப்பில் தமிழ்நாடு அரசு ஊர்தி இடம் பெறாது என்று இந்திய பாதுகாப்பு அமைச்சகம் நேற்று மாலை உறுதிப்படுத்தியுள்ளது.

குடியரசு தின விழாவில் அலங்கார ஊர்தி அணிவகுப்பில் இடம் பெறுவது குறித்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு, மேற்கு வங்க மாநில அரசுகளின் கோரிக்கை ஏற்கப்படவில்லை. இது குறித்து ஏற்கனவே தகவல் அளிக்கப்பட்டு விட்டதாகவும் பாதுகாப்புத்துறை அமைச்சக மூத்த அதிகாரி கூறியதாக ஏஎன்ஐ தெரிவித்துள்ளது.

மேலும், கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையாக பார்வையாளர்கள் எண்ணிக்கை வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 25, 000 பேர் அனுமதிக்கப்பட்டனர். ஆனால், தற்போது 5, 000 - 8, 000 பேர் மட்டுமே பங்கேற்க அனுமதிக்கப்படவுள்ளனர் என்றும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்திய சுதந்திரப் போராட்ட வீராங்கனை ராணி வேலு நாச்சியார், மருது பாண்டியர்கள், வ.உ.சிதம்பரனார், பாரதியார் ஆகியோரது உருவங்களைக் கொண்ட தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்திக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் வலியுறுத்தினர்.

தமிழ்நாடு மட்டுமின்றி கேரளா, மேற்கு வங்க மாநில அரசு ஊர்திகளுக்கும் அனுமதி இல்லை. அவற்றின் கோரிக்கைகளையும் மத்திய அரசு நிராகரித்துள்ளது.



## ஜனாதிபதியின் செயலர் இன்று பதவியேற்பு!

கொழும்பு, ஜன. 19

இதுவரை காலமும் பிரதமரின் செயலாளராக கடமையாற்றி வந்த காமினி செனரத் இன்று ஜனாதிபதியின் செயலாளராக பதவியேற்கிறார்.

நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் அனுர திஸாநாயக்க எதிர்வரும் 20ஆம் திகதி பிரதமரின் செயலாளராக கடமைகளை பொறுப்பேற்க உள்ளார்.

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தர கடந்த வியாழக்கிழமை தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, அவரால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு காமினி செனரத் நியமிக்கப்பட்டார். (அ)

# ஒட்சிசன் தேவையுள்ள நோயாளர் எண்ணிக்கை தினசரி அதிகரிப்பு!

## மீண்டும் வலுக்கும் கொரோனா நெருக்கடி

கொழும்பு, ஜன. 19

**அண்மைய நாட்களில் அடையாளம் காணப்பட்டு வரும் கொரோனா தொற்றாளர்களது எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டு வரும் நிலையில் ஒட்சிசன் தேவையுள்ள கோவிட்-19 நோயாளர்களது எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட கோவிட் தொடர்பான இராஜாங்க அமைச்சின் பிரதான இணைப் பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி, ஒட்சிசன் தேவையுடைய கோவிட் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

கோவிட் நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 70 சத்திர சிகிச்சை கட்டில்களில், 52 கட்டில்களிலும் நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக நோயாளர்களின் எண்ணிக்கை சற்று அதிகரிப்பைக் காட்டுகிறது.

எனவே, பொதுமக்கள் உரிய வகையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என கோவிட்-19 தொடர்பான இராஜாங்க அமைச்சின் பிரதான இணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி கூறினார். (அ)



# கொழும்பு துறைமுக நகரத்தை பார்க்க அலைமோதும் கூட்டம்!

## மீண்டுமொரு கொரோனா அலைக்கு வாய்ப்பு?

கொழும்பு, ஜன. 19

புதிதாக திறக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரத்தின் மெரினா நடைபாதையில் பெரும் மக்கள் கூட்டம் அலைமோதுவது கொழும்பு துறைமுக நகர கொரோனா அலை உருவாகும் என்ற அச்சத்தை எழுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களின் நடத்தை புதிய கொரோனா அலையை உருவாக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

எனவே, கொழும்பு துறைமுக நகரத்தின் மெரினா நடைபாதையில் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது கண்டிப்பாக அமுல்படுத்தப்படவேண்டும் என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயம் குறித்து செய்தி வெளியிட்டுள்ள ஆங்கில ஊடகமொன்று, ஆதாரங்களின்படி, ஓமைக்ரோன் மாறுபாடு இலங்கையில் பரவி வருவதாகவும் கொழும்பு துறைமுக நகரத்தின் மெரினா நடைபாதையில் கூட்டம் கூடுவது தொற்றுநோய்களின் எண்ணிக்கையை அதிகரிக்கக்கூடும் எனவும் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக, சமூக விலகல் இல்லாமல் உல்லாசப் பாதையில் நுழைவதற்கான முறைக்காக பொதுமக்கள் காத்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வளாகத்துக்குள்கூட சமூக இடைவெளியை கடைப்பிடிக்கவில்லை என்றும் நீண்ட வார இறுதியில் நடைபாதையில் நுழைந்த பெருந்திரளான மக்கள் முகக்கவசம் அணியாமல் புகைப்படம் எடுத்துக்கொண்டதாகவும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 50,000 பேர் பார்வைக்காக இந்த இடத்துக்கு வருகை தந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு துறைமுக நகர மெரினா நடைபாதை கடந்த வாரம் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# தேவாலயத்தில் கைக்குண்டு மேலும் ஒருவர் கைதானார்!

கொழும்பு, ஜன. 19

பொரளை கத்தோலிக்க தேவாலயமொன்றில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எம்பிலிப்பிட்டிய, பனாமுர பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் துறைமுக பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் கடவத்தை, பியன்வல பிரதேசத்தில் வசிக்கும் 65 வயதுடையவராவார்.

கடந்த 11 ஆம் திகதி பொரளை அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதுடன், குறித்த தேவாலயத்துடன் நீண்ட காலமாக தொடர்புகொண்டிருந்த மருதானையை சேர்ந்த 56 வயதுடைய நபரொருவரே சம்பவத்தின் பிரதான சந்தேக நபராக பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மேலும் மூன்று சந்தேக நபர்களை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# அரிசி தட்டுப்பாடு ஏற்படாது

கொழும்பு, ஜன. 19

எதிர்வரும் 10 மாதங்களுக்கு தேவையான நெல் இருப்பு நாட்டில் இருப்பதாகவும் அரிசி தட்டுப்பாடு ஏற்படாது எனவும் சிறிய மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய மாகாணங்களிலிருந்து நெல் அறுவடை கிடைப்பதன் காரணமாக இந்த வாரம் அரிசி விலைகளில் குறைவு ஏற்படக்கூடும் என அந்தச் சங்கத்தின் தலைவர் பி.கே ரஞ்சித் தெரிவித்துள்ளார். சந்தைகளில் தற்போது சகல ரக அரிசிகளின் விலைகளும் அதிக ரித்துள்ளன.

கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்ட நாள் முதல் வர்த்தகர்கள் விரும்பியவாறு அரிசிகளின் விலைகளை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்நிலையில், அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என சிறிய மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் பி.கே. ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

# நெருக்கடியிலும் மருந்துகள் மீதான கட்டுப்பாட்டு விலை நீக்கப்படாது!

கொழும்பு, ஜன. 19

அந்நிய செலாவணி நெருக்கடியால் ஏற்பட்ட சிரமங்களுக்கு மத்தியிலும், இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் மீதான கட்டுப்பாட்டு விலையை நீக்க முடியாது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருந்துகளுக்கள் மீதான கட்டுப்பாட்டு விலையை நீக்குவது பெரும்பாலான மக்கள் மீது பாரிய சுமையை ஏற்படுத்தும் என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.

நாட்டுக்கு 80 வீதத்துக்கும் அதிகமான மருந்துகளை இறக்குமதி செய்யும் இலங்கை மருந்துத் தொழிற்துறை சம்மேளனம், இதற்குரிய நடவடிக்கையை எடுக்காதுவிட்டால் தொழில்துறை வீழ்ச்சியடையக்கூடும் என எச்சரித்தது.

இதனை அடுத்தது அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடிய அமைச்சர், மருந்துகளுக்கள் மீதான கட்டுப்பாட்டு விலையை நீக்க முடியாது என திட்டவட்டமாக அறிவித்ததாக கூறினார்.

சுகாதார அமைச்சு மருந்துகளுக்கு தட்டுப்பாடு இல்லை என அறிவித்துள்ள அதே வேளை, சில மருந்துகள் பற்றாக்குறை இருப்பதாகவும் நிலைமை மோசமாகலாம் என்றும் இலங்கை மருந்துத் தொழிற்துறை சம்மேளனம் தெரிவித்துள்ளது. (அ)



## மூத்த கல்வியியலாளர் பஞ்சலிங்கத்துக்கு 'அன்பே சிவம்' விருது வழங்கி கௌரவம்

யாழ்ப்பாணம், ஜன. 19

மூத்த கல்வியியலாளர் அப்பாத்துரை பஞ்சலிங்கம் அகில இலங்கை சைவ மகா சபையினால் 'அன்பே சிவம்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அகில இலங்கை சைவ மகா சபை தைப்பூச திருநாளை முன்னிட்டு நடத்திய அன்பே சிவம் நிகழ்வும், விருது வழங்கலும் நேற்று முன்தினம் பிற்பகல் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாணம் மற்றும் கொக்குவில் இந்து கல்லூரிகளின் முன்னாள் அதிபர் அப்பாத்துரை பஞ்சலிங்கம் அன்பே சிவம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அத்தோடு அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற திருமந்திரப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். ஸ்ரீசற்குணராஜா, வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் இராசேந்திரம் குருபரன், ஓய்வுநிலை நீதிபதி இ.வசந்தசேனன், விரிவுரையாளர்கள், அகில இலங்கை சைவ மகா சபையினார், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)



## நாட்டை வந்தடைந்தது ஜேர்மன் போர்க்கப்பல்

கொழும்பு, ஜன. 19

பயர்ன் எனப்படும் ஜேர்மனியின் போர்க் கப்பல், இலங்கை கடற்படையுடன் இணைந்து கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த இந்தக் கப்பல் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்னதாக இந்தப் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளது.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் ஜேர்மனியின் இந்தப் போர்க் கப்பல் நாட்டுக்கு வந்துள்ளது.

ஜேர்மனியின் பயர்ன் போர்க் கப்பல் 1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி சேவையில் இணைக்கப்பட்டது.

அத்துடன், கடற்பரப்பு மற்றும் வான் பரப்பை கண்காணிப்பதற்கான வசதிகளும் அதி சக்தி வாய்ந்த ராடர் கட்டமைப்பும் இதில் உள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இருந்து இந்தக் கப்பல் இந்திய பசுபிக் பிராந்தியத்திற்கான கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கைக்கான ஜேர்மன் தூதரகம் தெரிவித்துள்ளது.

வட கொரியா மீது ஐக்கிய நாடுகள் சபை பிறப்பித்திருந்த தடைகள் தொடர்பில் கண்காணிப்பதற்காக ஏற்கனவே இந்த கப்பல் பயன்படுத்தப்பட்டிருந்தது. (அ)

## மரக்கறி விலை வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 19

மரக்கறிகளின் விலைகள் குறைந்துள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

மரக்கறிகள் விலை அதிகரிப்பு காரணமாக பொதுமக்கள் பருப்பு மற்றும் உருகிளைக் கிழங்கு ஆகியவற்றின் நுகர்வு அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மரக்கறிகளின் விலை அதிகரிப்பு காரணமாக பொது மக்கள் அதனை கொள்வனவு செய்வதை குறைத்துக்கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

இதன் காரணமாக மரக்கறிகளின் விலைகள் சடுதியாக குறைவடைந்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# நெல் சந்தைப்படுத்தலை மட்டுப்படுத்தவேண்டும்!

### கிளிநொச்சியில் கவனவீர்ப்பு பேரணி

கிளிநொச்சி, ஜன. 19

**பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் நெல் சந்தைப்படுத்தலை மாவட்டத்துக்குள் மட்டுப்படுத்தக் கோரி கிளிநொச்சியில் நேற்று செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்பு பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

**இந்த பேரணி கிளிநொச்சி மாவட்ட பெண்கள் சிவில் சமூக வலையமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.**

கிளிநொச்சி டிப்போ சந்தியில் கவனவீர்ப்பில் ஈடுபட்ட பெண்கள் ஏ-9 வீதி ஊடாக கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்று அங்கு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் முன்னிலையில் மகஜர் வாசிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடை இடம்பெற்ற வரும் நிலையில் குறித்த நெல்லை வெளி மாவட்டங்களுக்கு சந்தைப்படுத்தாது, மாவட்டத்துக்கு உள்ளேயே சேமிக்க நடவடிக்கை எடுக்குமாறு இதன்போது பேரணியில் ஈடுபட்டவர்களால் வலியுறுத்தப்பட்டது.





நாட்டில் தற்போது உள்ள பொருட்களின் விலை அதிகரிப்பால் மக்கள் பெரும் சவால்களை எதிர்கொண்டு வருவதாகவும், அதற்கு ஏற்ற வகையில் அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இதன்போது பேரணியில் ஈடுபட்டவர்களால் வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வென்னப்புவ தேவாலயம் ஒன்றினுள் பழமையான கல்லறை கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜன. 19

வென்னப்புவ பகுதியிலுள்ள தேவாலயம் ஒன்றில் முன்னெடுக்கப்பட்ட கட்டட நிர்மாணப் பணிகளின்போது பழமையான கல்லறையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வென்னப்புவ-போலவத்த பரலோக அன்னை தேவாலயத்தின் கட்டட நிர்மாணத்துக்கான அகழ்வின்போதே பழமையான கல்லறையின் சிதைவுகள் வெளிப்பட்டுள்ளன.



தேவாலயத்துக்கு அருகே நிர்மாணப் பணிகளுக்காக நிலம் தோண்டப்பட்டபோது இந்த கல்லறை கண்டுபிடிக்கப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் விளக்கமறியல் பெப்ரவரி முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி கைது செய்யப்பட்ட 13 மீனவர்களும் மறுநாள் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மூன்றாவது தவணையாக குறித்த வழக்கு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது 13 மீனவர்களின் விளக்கமறியலை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி வரை நீதவான் நீடித்து உத்தரவிட்டார்.

(அ-03)

## தாயும் மகனும் விபத்தில் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 19

எல்பிட்டி - பிடிகல பிரதான வீதியின் அமுகொட பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் தாயும் மகனும் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் பாரவூர்தியுடன் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பெலவத்த பிரதேசத்தைச் சேர்ந்த தாய் (வயது-47) மற்றும் மகன் (வயது-21) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

விபத்தை அடுத்து பாரவூர்தியின் சாரதி தப்பியோடிய நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

ஈழநாடு



# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை துரிதமாக நடைபெறவேண்டும்

## எதிர்க்கட்சி வலியுறுத்தல்



**கொழும்பு, ஜன. 19**

**தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என எதிர்க்கட்சி வலியுறுத்தியுள்ளது.**

விசாரணைகளை விரைந்து முடித்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.

தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவர், அந்த தரப்புக்கு நிதியுதவி மற்றும் அரசியல் ரீதியாக உதவியவர்கள் யார் என்பது குறித்து அறிந்து கொள்ள பொது மக்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர் என அவர் கூறினார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான முக்கிய கேள்விகளுக்கு இன்னும் பதிலளிக்கப்படவில்லை என்றும் அதேநேரத்தில் விசாரணைகள் மந் தகதியில் தொடர்ந்தால் பலருக்கும் கேள்விகள் எழும் என்றும் நிரோஷன் பெரேரா குறிப்பிட்டார். (அ)

# இடியன் துப்பாக்கியுடன் பளையில் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஜன. 19

பளை-சோறன்பற்றுப் பகுதியில் நபர் ஒருவர் சட்ட விரோதமாக இடியன் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று முன் தினம் இரவு குறித்த சந்தேக நபரின் வீட்டை சோதனை யிட்டபோது சந்தேக நபரிடம் இருந்து இடியன் துப்பாக்கி மீட்கப்பட்டது.

இந்நிலையில், சந்தேக நபரை பளை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் சந்தேக நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பளை பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டுள் ளனர். (அ)

# வவுனியாவில் தப்பிய கைதி மீண்டும் பொலிஸாரால் கைது

வவுனியா, ஜன. 19

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட கைதி ஒருவர் தப்பியோடியுள்ளார்.

இதனையடுத்து, விரைந்து செயற்பட்ட பொலிஸார் அந்த கைதியை மீளவும் கைது செய்தனர்.

நேற்று முன் தினம் இடம் பெற்ற இந்த சம்பவத்தில் வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு தப்பியோடியுள்ளார்.

இதனையடுத்து, குறித்த நபரை தேடும் பணியை சிறைச்சாலை உத்தியோத்தர்களும், பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

பொலிஸார் துரிதமாக செயல்பட்டு வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் சி.சி.ரி.வி கமெராவின் உதவியுடன் தேடுதலை மேற்கொண்டு குறித்த நபரை மீளவும் கைது செய்தனர். (அ)



# ஜனாதிபதியின் உரை கேட்க கத்தோலிக்க, கிறிஸ்தவ தலைவர்கள் வரவில்லை

கொழும்பு, ஜன. 19

ஒன்பதாவது பாராளுமன்றத்தில் இரண்டாவது கூட்டத் தொடர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நேற்று முற்பகல் 10 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித் துவைக்கப்பட்டது.

இதில், அழைக்கப்பட்ட மதத் தலைவர்கள் பங்கேற்றிருந்தனர். பௌத்த தேரர்கள் 16 பேர், இந்து மதகுருமார் ஒருவர், இஸ்லாமிய மதத் தலைவர்கள் இருவர் பங்கேற்றிருந்தனர். கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள் எவரும் சமூகமளிக்கவில்லை.

கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க மதங்களைச் சேர்ந்த தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையா? அல்லது அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவர்கள் புறக் கணித்து விட்டார்களா? என்பது தொடர்பில் இதுவரைக்கும் எவ்விதமான தகவல்களும் வெளியாகவில்லை. (அ)

# எத்தனோல் வர்த்தகர் தப்பிய விவகாரம், அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு, ஜன. 19


எத்தனோல் மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப் பட்ட வர்த்தகர் ஒருவருக்கு விமான நிலைய வி.ஐ.பி முனையத்தை பயன்படுத்துவதற்கு இராஜாங்க அமைச்சர் ஒருவர் வசதி செய்ததாக தெரிவிக்கப் பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் செய்தி வெளியானதை அடுத்து, அது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி தயாரிக்கப்பட்ட விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எத்தனோல் மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட வர்த்தகர் ஒருவர் டுபாய்க்கு தப்பிச் சென்ற போது விமான நிலைய வி.ஐ.பி முனையத்தைப் பயன்படுத்துவதில் இராஜாங்க அமைச்சர் ஒருவர் தலையிட்டதாக அண்மையில் செய்தி வெளியானமை குறிப்பிடத்தக்கது. (அ)






# யாழ்.போதனா வைத்தியசாலையில் திரவ ஒட்சிசன் கொள்கலன் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்.போதனா வைத்திய சாலையின் ஒட்சிசன் பயன்பாட்டுக்கென 10,000 லீற்றர் கொள்ளளவு உடைய திரவ ஒட்சிசன் கொள்கலன் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்திய சாலை பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா இதனை நாடா வெட்டி ரீதியாக திறந்து வைத்தார்.

சுகாதார அமைச்சின் நிதி 24 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஒட்சிசன் திரவக் கொள்கலனே நேற்று திறந்து வைக்கப்பட்டது.

குறித்த திரவ ஒட்சிசன் கொள்கலன் மூலம் விடுதிகளுக்கு குழாய் வழியாக ஒட்சிசனை எடுத்துச் செல்லக் கூடியதாக உள்ளது என யாழ்.போதனா வைத்திய சாலை பிரதிப் பணிப்பாளர் பவானந்தராஜா தெரிவித்தார்.

கடந்த காலங்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒட்சிசன் தட்டுப்பாடு காரணமாக பல்வேறு இடர்களை எதிர்நோக்கியதாகவும், வடக்கு மாகாணத்தில் முதன்முதலாக அமைக்கப்பட்ட இந்த திரவக் கொள்வதன் மூலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒட்சிசன் தட்டுப்பாடு இல்லாது சிகிச்சை வழங்க முடியும் எனவும் அவர் மேலும் கூறினார். (அ-03)

# மனைவி, மாமியார் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு

## குருவிட்ட பகுதியில் சம்பவம்

கொழும்பு, ஜன. 19

மனைவி, மாமியாரின் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் மரணமான சம்பவம் ஒன்று குருவிட்ட கந்தலந்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின்போது 35 வயதான குறித்த நபர் மீது அசிட் வீசியும் பொல்லால் அடித்தும் கொலை செய்துள்ளதாக குருவிட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலின்போது படுகாயமடைந்த இவர் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின் மரணமடைந்தார்.

இச்சம்பவத்தையடுத்து உயிரிழந்த நபர் மீது தாக்குதல் நடத்திய மனைவியும் மனைவியின் தாயாரும் குருவிட்ட பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மரணமடைந்தவர் குடிக்கு அடிமையாகி மனைவியை அடித்துத் துன்புறுத்துபவர் எனவும் இவருக்கு எதிராக மனைவியால் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவதினம் இவர் குடித்துவிட்டு மனைவியின் தம்பியின் வீட்டில் மறைந்திருந்து தாக்குதல் நடத்த முற்பட்ட போது, தற்பாதுகாப்புக்காக இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக இவரது மனைவியும் மாமியாரும் பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை குருவிட்ட பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# பல்கலைக்கழகங்களில் பாலியல் துன்புறுத்தல் மற்றும் வன்முறையும் ஜனநாயக மயமாக்கலும்

சிவமோகன் சுமதி

எம் மத்தியில் பெரிதும் நிலவி வரும் பேசப்படா வன்முறைகளிலொன்று பாலியல் துன்புறுத்தலும் பாலியல் வன்முறையுமாகும். எமது ஆணாதிக்கம் நிறைந்த அதிகாரத் தாபனங்களில் "பாலினம்" என்பது ஆண், பெண் என்ற இருமமாகவும் பெண்மை என்பது கீழ் நிலையாகவும் கருதப்படுகின்றது. பாலியல் வன்முறையை எதிர்கொள்ள எமது கல்வி வளாகங்களில் பாலினம், பெண்கள் மற்றும் வேறு பாலினத்தாரை ஓரங்கட்டல் போன்றவை தொடர்பான கேள்விகள் தொடுக்கப்பட வேண்டும்.

பாலியல் வன்முறையானது அசாதாரணமான ஒரு விடயமாகவும் இயல்பாகவே காணப்படும் பாலின வேறுபாடுகளால் அது உருவாகின்றது எனவும் கருதப்படுகின்றது. இங்கு "பாதிக்கப்பட்டவரின்" ஓரங்கட்டப்பட்ட சமூக நிலையை நாம் கருத்தில் கொள்வதில்லை. பெரும்பாலும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் "பாதிக்கப்பட்ட" நபர் மீதே பழி சுமத்தப்படுகின்றது. "அவளின்" பாலினப் பண்பு காரணமாகவே அப்பாவியான ஒருவர் குற்றம் செய்யத் தூண்டப்படுகிறார் என்று கூறுவது வழக்கம். பாலினத்தால் பாகுபட்ட எமது நிறுவனங்களை ஜனநாயகப்படுத்தும் முயற்சியில் பாலுணர்வு மற்றும் பாலினத்தால் தூண்டப்படும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். பாலியல் வன்தாக்கத்தினை அதிகாரத்தைத் தாபிக்கும் ஒரு நடத்தையாக நோக்குவதோடு அதன் மெய்யான அர்த்தத்தையும் புரிந்துகொள்ளல் வேண்டும். அதாவது பாலின அடிப்படையில் பார்வையிடப்படும் "உடல்" மீதான பாலியல் வன்முறை என்ற தெளிவு இங்கு அவசியமாகின்றது.

இங்கு நன்னடத்தை என்பதையும் நெறிமுறை என்பதையும் குழப்பிக் கொள்ளக் கூடாது. ஒருவருக்குத் தனது பாலியல் அபிலாஷைகளை வன்முறையற்ற ரீதியில்இ சுய விருப்பத்துக்காக இன்னொருவரைப் பயன்படுத்தாத வகையில் வெளிக்காட்டுவதற்குச் சகல உரிமையும் உண்டு. இந்த உரிமையை நிவர்த்திப்பதையும், அதிகாரம் கொண்ட ஒருவர் எளிதில் இலக்காகக் கூடிய ஒரு நபரைச் சுய விருப்பத்துக்காகப் பயன்படுத்துவதையும் ஒன்றிணைத்துப் பார்த்தல் தவறானது.

பாலியல் துன்புறுத்தலும் வன்முறையும் நாளாந்த வாழ்வின் கூறுகளாகக் காணப்படுகின்றன. இதனையே பியர் போர்டியூ கட்டமைப்பு-வழக்க-இருப்பு என்று பொருள்படும் தி ஹபிடஸ் எனக் குறிப்பிடுகின்றார்.

பல்கலைக்கழகங்களில் நடத்தைகளை வழக்கப்படுத்தல், கல்விக்கான இடங்களை உரிமை கோரல் மற்றும் ஓரங்கட்டுதல் மூலம் இவ்வாறான வழக்கங்களின் தொடர்ச்சி பேணப்படுகின்றது. எமது வீடுகள், சந்தை போன்ற பொது இடங்கள், வீதிகள், திரையரங்குகள், கல்வி மற்றும் வேலைத் தளங்களில் உள்ள அதிகார அடிப்படையிலான இடைத்தொடர்புகளின் பிரதிபலிப்பாக இவ் "வழக்கம்" காணப்படுகின்றது. எமது உரையாடல்கள், நடத்தைகள், சூழல் என அனைத்து அம்சங்களிலும் இவ் வழக்கமானது அதிகார ரீதியிலான உறவுமுறைகளைத் தாபிக்கின்றது. பாதிப்பிற்குள்ளாகுபவர்கள், வழக்கத்திற்கு மாறானவர்களாகவும் அந்நியர்களாகவும் ஒதுக்கப்படுகின்றனர். இந்த நடைமுறையில் இதனை எதிர்த்துப் போராடச் சக்தியற்றவர்களாகவும் உதவிக்கரமற்றவர்களாகவும் அவர்கள் நிர்க்கதியாக்கப்படுகின்றனர்.

பாலியல் வன்முறைகள் பல்கலைக்கழகங்களின் அதிகார மற்றும் பாலினம் ரீதியான படிநிலைகளுள் உள்ளடக்கப்பட வேண்டும். ஒரு மாணவியோ கனிஷ்ட ஆசிரியையோ அசௌகரியமான, சங்கடப்படும்படியான, இழிவுபடுத்தும் அல்லது ஆபத்தான சந்தர்ப்பத்தை எதிர்நோக்குகையில் அவர் செல்லக் கூடிய இடம் யாது? அவரை இந் நிலைக்குள்ளாக்கிய அதே நபரால் இச் சம்பவம் மத்தியஸ்தம் செய்யப்படாது என்பதற்கான உத்தரவாதம் என்ன? பொதுவான கொள்கைகளுடைய நபர்களின் வலைப்பின்னலாகக் காணப்படும் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் நியாயமான விசாரணைகள் நடாத்தப்படுமா? வெளிப்படையாக அல்லாது சமூக மற்றும் நிறுவனம் சார் உறவுமுறைகளில் பின்னிப்பிணைந்திருக்கும் அதிகார இடைத்தொடர்பு களைக் கொண்ட படிமுறை சார்ந்த எமது அமைப்புக்களில் மேற்கூறிய உத்தரவாதங்களை உறுதி செய்ய முடியுமா என்பது கேள்விக்குறியானது.

இன்று இலங்கையின் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் பாலியல் மற்றும் பாலினம் ரீதியான துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைக்கெதிரான கொள்கையை உருவாக்கியுள்ளன. இதன் நோக்கம் பொதுவாக அதிகார நிலையிலுள்ள ஒரு நபரால் வேறொருவரின் கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படுகையில், பாதிக்கப்பட்டவருக்கான நடைமுறைகள் மற்றும் ஆதரவுக்கான வழிகாட்டலை வழங்குவதாகும். இருந்தாலும் பாலியல் துன்புறுத்தலானது ஒரு தீராப் பிரச்னையாகத் தொடர்கின்றது. தனிநபர்களாகவும் நிறுவனங்களாகவும் ஒன்றிணைந்தாலன்றிப் பெண்களோ, இலகுவில் இவ் வன்முறைகளுக்கு ஆளாகக்கூடிய நபர்களோ எதிர்க்குரல் எழுப்ப உகந்த ஒரு கலாசாரத்தை உருவாக்குவது கடினம். வன்முறைக்குள்ளாகும் பலர் அமைதியாகவே வருந்துவதோடு அவர்களது அச்சங்களையோ அசௌகரியங்களையோ முற்றாக வெளிப்படுத்த இயலாதவர்களாகின்றனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தகுதிகாண் விரிவுரையாளர் ஒருவர் கல்லூரி வளாகத்தில் தனக்கெதிராக இடம்பெற்ற பாலியல் துன்புறுத்தல் மற்றும் வன்முறைக்கெதிரான முறைப்பாட்டை முன்வைத்துள்ளார். எமது பல்கலைக் கழகமானது அதன் அங்கத்தவரான ஒருவரைப் பாதுகாக்கும் கடமையினின்றும் தவறிவிட்டதா என்ற கேள்வி இங்கு எழுகின்றது. இவ் வழக்கின் நியாயங்கள் ஒரு புறமிருக்க பல்கலைக்கழகம் என்ற ரீதியில் கனிஷ்ட ஊழியர்கள் மற்றும் மாணவர்களைப் பாதுகாப்பதில் அதிக கவனமும் செயலூக்கமும் தேவைப்படுகின்றதல்லவா?

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கொள்கையானது ஓரளவு தரமானதாக இருப்பினும் வன்முறைச் செயல் இடம்பெற முன்னர் அதனை எதிர்க்க ஒருவரை ஊக்குவிக்கும் தன்மை பற்றாக்குறையாகவுள்ளது. எமது மாணவர்களுக்கோ ஆசிரியர்களுக்கோ இக் கொள்கை பற்றிய அறிவு அற்பசொற்பம். ஆசிரியர் விருத்திச் செயற்றிட்டங்களின் கீழ் இக் கொள்கை பரப்பப்படினும் வேறு பல்கலைக்கழகங்களில் இவ்வாறான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இக் கொள்கையானது பணியாளர் ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பினும் இதுவரை அவ்வாறான உள்ளடக்கம் எதுவும் இடம்பெறவில்லை. பல்கலைக்கழக வலைத் தளத்தின் "புகார்கள்" பகுதியின் கீழ் மட்டுமே அக் கொள்கையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

பல்கலைக்கழகங்களில் படிநிலை ரீதியான உறவுமுறைகள் இல்லாதொழிக்கப்பட்டு உரையாடல்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். படிநிலையில் "கீழே" உள்ளவர்களின் கருத்துக்களையும் உள்ளடக்கும் வகையில் இப் பிரச்னையைத் தீர்ப்பது தொடர்பான பட்டறைகள் பாலியல் வன்முறைக்கெதிரான இயக்கத்தை உருவாக்க உதவும். எனினும் இப் போராட்டத்தில் இவை மட்டும் போதா.

பல்கலைக்கழகங்களில் கொள்கையானது வலுப்படுத்தப்பட்டு மத்திய பங்கு வகிக்கும் ஒன்றாக மாற்றப்பட வேண்டும். ஆசிரியர்கள் மற்றும் மாணவர் மத்தியில் இக் கொள்கையானது பரப்பப்படல் வேண்டும். சிறுபான்மை இனங்கள் பல்கலைக்கழகங்களில் முற்றாக உள்ளடக்கப்படுவது அரிது. இவ்வாறான வர்க்க ரீதியான பாகுபாடுகளும் புறந்தள்ளல்களும் சமத்துவமற்ற பாலியல் உறவுகளை மேலும் வலுப்படுத்துகின்றன. பகிடிவதைக்கெதிரான தீர்க்கமான கொள்கைகள் முன்வைக்கப்படுவதோடு மாணவர்களுக்கிடையிலான படிநிலைகளும் அகற்றப்பட வேண்டும். குறிப்பாக முதலாம் வருட மாணவர்களுக்கான வசதிகளும் ஆதரவும் வழங்கப்பட வேண்டும். பிரதிநிதித்துவம் மற்றும் பங்கேற்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் கனிஷ்ட ஊழியர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். சிற்றூழியர்கள் பெரும்பாலும் வெளி நிறுவனங்களிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தப்படுவதோடு அவர்களுள் பலர் பெண்களாவர். பல்கலைக்கழகங்களின் மறைமுகமான அதிகாரக் கட்டமைப்புகளை இவர்கள் எவ்வாறு கையாளுகிறார்கள் என்பது சிந்திக்கத் தக்கது.

அதிகாரப் படிநிலையின் கீழ் மட்டங்களிலுள்ள பெண்கள், மாணவர்கள், மற்றும் சிறுபான்மையினரிலிருந்து மாற்றமானது ஆரம்பிக்கப்படுவதோடு கல்வி சார்ந்தோர் மற்றும் சாராதோர் என சகல தரப்பினரும் இதில் ஒன்றுபடல் அவசியம். எமது தாபனங்களில் நெருக்கமான, ஆரோக்கியமான உறவுகளின் நிலவுகைக்கும், ஜனநாயகத்துக்குமான போராட்டமானது ஒருங்கிணைந்த ஒரு முயற்சியாக இடம்பெறுவது இன்றியமையாததாகும்.

**- எழுத்தாளர் பேராதனைப் பல்க லைக்கழகத்தின் ஆங்கிலத் துறையைச் சார்ந்தவர்.**

**மொழிபெயர்ப்பு: கோபிகா சிவகுமார்**

**பல்கலைக்கழகங்களில் படிநிலை ரீதியான உறவுமுறைகள் இல்லாதொழிக்கப்பட்டு உரையாடல்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். படிநிலையில் "கீழே" உள்ளவர்களின் கருத்துக்களையும் உள்ளடக்கும் வகையில் இப் பிரச்னையைத் தீர்ப்பது தொடர்பான பட்டறைகள் பாலியல் வன்முறைக்கெதிரான இயக்கத்தை உருவாக்க உதவும்.**



# பன்றியின் இதயம் மனிதருக்கு பொருந்தியது எப்படி?



**பொதுவாக, 'மாற்றின உறுப்பு மாற்றுச் சிகிச்சை'யில் பொருத்தப்படும் உறுப்புகளை மனித உடல் நிராகரித்துவிடும். அப்படியே ஏற்றுக்கொண்டாலும் எதிர்கால நிராகரிப்பைத் தடுக்கத் தடுப்பாற்றல் எதிர்வினையை மட்டுப்படுத்தும் வீரிய மான மருந்துகளைப் பயனாளி வாழ்நாள் முழுவதும் சாப்பிட வேண்டும்.**

**கு.கணேசன்**

கடந்த ஜனவரி 7இல் நவீன மருத்துவம் உலகிலேயே முதல் முறையாக மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் இதயத்தை மனிதருக்குப் பொருத்தி சாதனை செய்துள்ளது. உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்குத் தேவையான மனித உறுப்புகள் கிடைக்காமல், உலகெங்கும் இந்த அறுவை சிகிச்சைகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டிருந்த நிலையில், விலங்குகளின் உறுப்புகளையும் மனிதருக்குப் பயன்படுத்த முடியும் எனும் நம்பிக்கையை இது விதைத்துள்ளது.

அமெரிக்காவின் மேரிலேண்ட் நகரைச் சேர்ந்த 57 வயதான டேவிட் பென்னட் ஒழுங்கற்ற இதயத் துடிப்பு காரணமாக மேரிலேண்ட் மருத்துவப் பல்கலைக்கழக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். செயற்கை சுவாசக் கருவிகளுடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த பென்னட்டுக்குப் பன்றியின் இதயத்தை மருத்துவர் கிரிஃபித் பொருத்தினார். இன்றுவரை அந்த இதயம் சீராக இயங்குவதாக அவர் தெரிவித்துள்ளார். இந்தச் செயல்முறையைச் சொல்வது எளிது. நடைமுறையில் கடினம்.

### உதவும் பன்றி உறுப்புகள்

மற்ற விலங்குகளைவிடப் பன்றியின் உறுப்புகள் கிட்டத்தட்ட மனிதர்களின் உறுப்புகளை ஒத்திருப்பதால், உறுப்பு மாற்று சிகிச்சைக்குப் பொருத்தமானவையாக இவை தேர்வு செய்யப்படுகின்றன. முதன்முதலில் 1838இல் பன்றியின் ஒளிப்படலம் (Cornea) மனிதக் கண்ணில் பொருத்தப்பட்டது. 1964இல் சிம்பன்சி குரங்கின் இதயம் மனிதருக்குப் பொருத்திப் பார்க்கப்பட்டது. அது தோல்வியில் முடிந்தது. 1984இல் ஆப்பிரிக்க/அரேபியக் குரங்கின் (Baboon) இதயம் ஃபாயி (Fae) எனும் குழந்தைக்குப் பொருத்தப்பட்டது. அது 21 நாட்களுக்கு உயிரோடு இருந்தது.

பொதுவாக, 'மாற்றின உறுப்பு மாற்றுச் சிகிச்சை'யில் (Xenotransplantation) பொருத்தப்படும் உறுப்புகளை மனித உடல் நிராகரித்துவிடும். அப்படியே ஏற்றுக்கொண்டாலும் எதிர்கால நிராகரிப்பைத் தடுக்கத் தடுப்பாற்றல் எதிர்வினையை மட்டுப்படுத்தும் வீரியமான மருந்துகளைப் பயனாளி வாழ்நாள் முழுவதும் சாப்பிட வேண்டும். அதனால்தான் இம்மாதிரியான அறுவைச் சிகிச்சைகள் வேகம் பெறவில்லை. ஆனாலும், சோதனை முயற்சியாகச் சென்ற ஒக்டோபரில் நியூயார்க் மருத்துவமனை ஒன்றில் மூளை இறப்பு ஏற்பட்ட ஒருவருக்குப் பன்றியின் சிறுநீரகம் உடலுக்கு வெளியில் பொருத்தப்பட்ட அதிசயம் நடந்தது.



பன்றியின் சிறுநீரகச் செல்களில் சர்க்கரை வடிவில் 'ஆல்பா-1' நொதி இருக்கிறது. மனித உடலில் இது இல்லை. பன்றியிடமிருந்து பெறப்படும் சிறுநீரகத்தில், இந்த நொதியைக் கண்டுகொள்ளும் மனித உடல், இதை அந்நியனாகக் கருதி, மேற்படி உறுப்பை நிராகரித்துவிடுகிறது. கலிபோர்னியாவில் இருக்கும் 'சிந்தெடிக்ஸ் ஜீனாமிக்ஸ்' நிறுவனம், மரபணு மாற்று உறுப்புகளை வளர்ப்பதில் புகழ்பெற்றது. இந்த நிறுவனம் 'ஆல்பா-1' நொதி இல்லாத பன்றியை மரபணு மாற்று முறையில் வளர்த்துக் கொடுத்தது. அதன் சிறுநீரகத்தை மூளை இறப்பு நோயாளிக்கு நியூயார்க் மருத்துவர்கள் பொருத்தினார்கள். அதனால், அதில் பிரச்னை எழவில்லை. இதை ஒரு மைல்கல் நிகழ்வாக மருத்துவ உலகம் பார்த்தது. இப்போது பன்றியின் இதயத்தை மனிதருக்குப் பொருத்தி வியப்பில் ஆழ்த்தியுள்ளனர் மேரிலேண்ட் மருத்துவமனை மருத்துவர்கள்.

### சாத்தியமானது எப்படி?

பன்றிகளில் மரபணு வரிசையைத் துல்லியமாக மாற்றியமைக்கும் ஆராய்ச்சியில் முன்னேறிக்கொண்டிருக்கும் மற்றொரு அமெரிக்க நிறுவனம் 'ரெவிவிகார்' (Revivicor). இந்த நிறுவனத்தினர், பன்றி செல்களில் உறுப்பு நிராகரிப்புக்குக் காரணமாக இருக்கும் 4 வகை மரபணுக்களை 'கிரிஸ்பர்' (CRISPR/ Cas9) எனும் மரபணுச் செதுக்கியால் செதுக்கி, அவற்றைச் செயலிழக்கச் செய்கின்றனர். அடுத்து, பன்றி செல்லின் மரபணு வரிசையில் புதிதாக 6 மரபணுக்களைப் புகுத்திவிடுகின்றனர்.

பிறகு, பன்றியின் கருமுட்டையிலிருந்து மரபணுவை நீக்கிவிட்டு, அதனுள் மேற்சொன்ன மாற்றியமைக்கப்பட்ட மரபணு உள்ள பன்றி செல்லைக் கலந்துவிடுகின்றனர். இப்போது இது கருக்கோளமாகிறது (Zygote). அதை 'வாடகைத் தாய்' பன்றியின் கருப்பையில் பதித்துவிடுகின்றனர். அதில் வளர்கருவாக (Embryo) வளர்ந்து சிசுவாகி 114 நாட்களில் மரபணு மாற்றமுள்ள பன்றிக்குட்டி பிறக்கிறது. படியாக்கம் (Cloning) மூலம் டோலி ஆடு பிறந்தது போல்தான் இது. இதன் பலனாக, மனித உடல் இந்த உறுப்புகளை அந்நியனாகக் கருதும் வாய்ப்பு குறைந்துவிட, உறுப்பு நிராகரிப்பு தவிர்க்கப்படுகிறது.

சாதாரணமாகவே பன்றிகளின் மரபணுக்களில் ரீட்ரோ வைரஸ்கள் வசிப்பதுண்டு. இவை உறுப்பு மாற்றத்துக்குப் பிறகு பயனாளிக்குத் தொற்றை உண்டாக்கி, உறுப்பு நிராகரிப்பைப் பூதாகரமாக்கும். பன்றியின் மரபணுக்களிலிருந்து 12 வகையான ரீட்ரோ வைரஸ்களை நீக்கியதன் மூலம் இது சரிசெய்யப்படுகிறது. இப்படி, 'ரெவிவிகார்' நிறுவனம் தயாரித்தளித்த மரபணு மாற்றுப் பன்றியின் இதயத்தையே பென்னட்டுக்கு மேரிலேண்ட் மருத்துவர்கள் பொருத்தியுள்ளனர்.

உறுப்பு நிராகரிப்பைத் தடுக்கும் புதிய மருந்து ஒன்றை பென்னட் இப்போது பயன்படுத்துகிறார். இதுவரை அந்த இதயத்தை அவரது உடல் நிராகரிக்கவில்லை. அவருக்குப் பொருத்தப்பட்டுள்ள பன்றியின் இதயம் மனித உடலுக்கு அந்நியமாகத் தெரியாத அளவுக்கு மரபணு மாற்றமுறையில் வளர்க்கப்பட்டது என்பதால், இந்த மருந்து இனியும் அவருக்குத் தேவைப்படுமா என்பது போகப்போகவே தெரியும்.

பன்றியின் இதயத்தை மனிதருக்குப் பயன்படுத்த முடியும் என்பதை 25 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் அசாம் மாநில மருத்துவர் ராம் பருவா நிரூபித்திருக்கிறார். 1997, ஜனவரி 1இல் 32 வயதான ஒருவருக்குப் பன்றியின் இதயத்தை அவர் பொருத்தினார். அந்த நோயாளி 7 நாட்களுக்கு உயிருடன் இருந்தார். அவருக்குப் பல தொற்றுகள் இருந்ததால், அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அரசிடம் இந்த சிகிச்சைக்கு முறையாக அனுமதி பெறவில்லை என்ற காரணத்துக்காக உறுப்பு மாற்றுச் சட்டம், 1994இன் கீழ் பருவா கைதுசெய்யப்பட்டார்.

### வரலாறு படைக்குமா?

இன்றைக்கு அமெரிக்காவில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் மாற்று உறுப்புகளுக்காகக் காத்திருக்கின்றனர். இந்தியாவில் இதயச் செயலிழப்பால் 50 ஆயிரம் பேர் அவதிப்படுகின்றனர். இவர்களில் அதிகபட்சம் 15 பேருக்குத்தான் இதய மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. ஆண்டுதோறும் 1.8 லட்சம் பேருக்குச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை தேவைப்படும் நிலையில், 6 ஆயிரம் பேருக்குத்தான் மாற்றுச் சிறுநீரகம் கிடைக்கிறது. வருடத்துக்கு 30 ஆயிரம் பேருக்குக் கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறது. ஆனால், 1,500 பேருக்கு மட்டுமே இது சாத்தியப்படுகிறது. இந்த நிலையில் மரபணு மாற்றுப் பன்றிகளின் உள் உறுப்புகளை மனிதருக்கும் பயன்படுத்துவது சாத்தியமானால், அனுதினமும் உயிருக்குப் போராடிவரும் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் காக்கப்படும். நவீன மருத்துவத்தில் புதிய வரலாறு படைக்கப்படும். ■

# ஒரு நெடும் பயணம்!



தோழர் சிவகுமார் 1980களில் இருந்து தனது 50களில் இறுதிவரை ஒரு பிரளயத்தின் ஊடான நெடும்பயணம்.

37 ஆண்டுகள் சமூக சமத்துவ பெருங்கனவும் இடையறாத தேடலுமாக பச்சிலை பள்ளியிலிருந்து தஞ்சை சேலம் சென்னை இலங்கையின் வடக்கு கிழக்கில் நீள அகலங்கள் கொழும்பு என சமூக செயற்பாட்டாளராக பரந்த வாசகனாக எழுத்தாளராக விமர்சகராக பத்திரிகை ஆசிரியராக வானொலி இதர ஊடகங்களின் செயற்பாட்டாளராக புத்தக வெளியீடு கருத்தரங்குகளின் ஆளுமைமிக்க கருத்தாளராக அறிவும் தர்க்கமும் மிளிரும் உரையாளராக அறிவொளி வீசிய தோழர் தத்துவம் இலக்கியம் ஓயாத தேடல் ஒரு அறிவுக் கருவூலமாக மார்க்சியம் பொதுவுடைமை பெரியாரியம் சாதி ஒடுக்குமுறை பெண்ணடிமைத்தனம் மொழியின் அதி காரம் பின்நவீனத்துவம் மணிக்கொடி காலத்திலிருந்து சமகாலம் வரை இலக்கிய பாரம்பரியம் உலக சினிமா என விரிந்த பார்வை ஈழமக்கள் பாரம்பரியத்தின் தோழர்களின் இன்பத்திலும் துன்பத்திலும் அவரும் ஒருவராக மிக நீண்ட பயணம் வெறுப்பு ஜனநாயக விரோத அரசியலுக்கு மாற்றாக சமூக சகோதரத்துவத்தை தோழமை நட்பை நேசித்தவர்.

அரசியல் இலக்கியத் தளங்களில் ஜனநாயக விரோதம் பாசிசம் பற்றிய எச்சரிக்கை உணர்வு எப்போதும் பிரக்ஞையில் இருந்து கொண்டிருந்தது தமிழக ஈழ இலக்கிய தரிசனம் ஆழமானது எமது சமுதாயத்தில் அரிதிலும் அரிதான சமூக அரசியல் இலக்கிய செயற்பாட்டாளர் புலமையாளர் "சுடர்மிகு அறிவுடன் படைத்துவிட்டாய் " என்று பாரதி கூறியது போல கொடிய நோய் அகாலமாக அவர் உயிரை பறித்தது. அவரது கருத்தியல் சிந்தனைத் தாக்கம் தோழர்கள் கலை இலக்கிய நெஞ்சங்கள் இடையே அமரத்துவ மாக நிலவும்!

தோழர் சிவகுமார் -அமின் -என்ற எமது காலத்தின்ஆளுமை விரிவாக தொடர்ந்து பேசப்பட வேண்டும்.


அவர் துணைவியார் வாசுகி பிள்ளைகள் உறவுகள் தோழர்களுடன் நண்பர்களுடன் துயர் பகிர்கிறோம் தாங்கொணாத் துயருடன் எம் பிரியாவிடை.

எம் இதய அஞ்சலிகள்.


**- சுகு சிறிதரன்**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

22. 


படத்தில் காட்டப்பட்டுள்ள பாதை வழியே A என்ற இடத்திலிருந்து புறப்பட்டு அம்புக்குறி காட்டும் வழியே ஒருவர் 3 சுற்றுக்கள் பயணித்தார் எனின், அவர் பயணித்த மொத்தத் தூரம் யாது?
1) 24 m
2) 72 m
3) 14 m


23. 



நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவைப் போல் எத்தனை மடங்கு முழு உருவின் பரப்பளவு ஆகும்?
1) 7
2) 2
3) 4




24. | O | v | △ | ix | □ | iii | ★ | vii |

இவ்வெண்களை இறங்கு வரிசைப் படுத்தும்போது உருக்கள் வைக்க வேண்டிய ஒழுங்கு.
1) △ ix ★ vii O V □ iii
2) □ iii O V ★ vii △ ix
3) △ ix ★ vii □ iii O V


25. தாளில் வரையப்பட்டு வெட்டி எடுக்கப்பட்ட இரு தளவடிவங்களையும் A இன் மீது B யை வைக்கும்போது தோன்றும் சரியான வடிவம் எது?


A


B

1) 
2) 
3) 


26. அப்பாவிற்கு 45 வயதாகும்போது தம்பிக்கு 5 வயது எனின், தம்பிக்கு 20 வயதாகும்போது அப்பாவின் வயது யாது?
1) 60 2) 65 3) 70

27.  என்னும் எழுத்து வடிவங்கள் தளவாடியில் தோன்றும் விதம்.

1) 
2) 
3) 


28. சரியாக எழுதப்பட்டுள்ள சொற்கள் கொண்ட தொகுதி
1) சவுக்காரம், வெண்ணீர், கைமாறு
2) சவர்க்காரம், வெந்நீர், கைம்மாறு
3) சவர்க்காரம், வென்னீர், கைமாரு

29. ராதா தரம் ஒன்றிலிருந்து தரம் ஐந்து வரை ஒழுங்காக வகுப்பேற்றம் செய்யப்பட்டாள். அவள் 2021ஆம் ஆண்டில் தரம் 5 இல் கல்வி கற்கின்றாள். எனின், அவள் பிறந்த நூற்றாண்டு தசாப்தம் யாது?
1) 21ஆம் நூற்றாண்டு 2ஆம் தசாப்தம்
2) 21ஆம் நூற்றாண்டு 1ஆம் தசாப்தம்
3) 20ஆம் நூற்றாண்டு 1ஆம் தசாப்தம்

30. 

இவ்வுருவில் காணக் கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை எத்தனை?
1) 9
2) 7
3) 8

❖ தரம் 5 இல் உள்ள 52 மாணவர்கள் வைத்திருந்த பேனை, பென்சில், அடிமட்டம் ஆகியவற்றின் விபரம் வரைபில் காட்டப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு 31, 32 ஆகிய வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.




31. அடிமட்டத்தையும், பேனையையும் மட்டும் வைத்திருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 2) 5 3) 8

## விடைகள்

21) 2 22) 2 23) 3 24) 1 25) 1 26) 1
27) 1 28) 2 29) 1 30) 3 31) 2

---

## கல்வி tv CHANNEL-1

**12.01.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**12.01.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# அரசின் ஆதரவுடன் மகாவலியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு!

கொழும்பு, ஜன.19

**மகாவலி ஆற்றில் சட்டவிரோத மணல் அகழ்வு அரச அனுசரணையுடன் மிகவும் சூட்சுமுமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வுகளுக்கான மையம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

மனம்பிட்டி, மடந்தெட்டி, நீலபொலை ஆகிய இடங்களில் பாரிய இயந்திரங்களைப் பயன்படுத்தி பாரியளவில் மணல் அகழ்வு இடம்பெறுவதுத் தொடர்பில், சுற்றுச்சூழல் அமைப்புகளால் புவியியல் ஆய்வு, சுரங்கப் பணியகம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சருக்கு அவ்வப்போது தகவல் வழங்கப்பட்டாலும் சட்டவிரோத மணல் அகழ்வு தடுத்து நிறுத்தப்படவில்லை என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

2021ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் இவ்வாண்டு ஜனவரி மாதத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள், திருகோணமலை பிரசேத்திலிருந்து 27 கிலோமீற்றர் எல்லைக்குள் 1,300 மணல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று குறித்த மையம் கோரிக்கை விடுத்துள்ளது. (கே)

# நிந்தவூரில் மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டது!

நிந்தவூர், ஜன. 19



நிந்தவூர் கடற்கரை பிரதேசத்தில் மீட்கப்பட்ட ஆணின் சடலத்தை நேற்று பொலிஸார் அடையாளம் காணப்பட்டனர்.

அம்பாறை - நிந்தவூர் பொலிஸ் பிரிவில் திங்கட்கிழமை இரவு சடலம் மீட்கப்பட்டது. அடையாளம் காணப்படாத இந்தச் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பொது மக்களிடம் பொலிஸார் கேட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை சடலம் அடையாளம் காட்டப்பட்டது. உயிரிழந்தவர் நிந்தவூர் 9 பகுதியை சேர்ந்த 32 வயதுடைய ஆதம்பாவா நிஹ்மதுல்லா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதையடுத்து, சடலம் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஐ)

# ஹற்றன் பாடசாலையில் 11 பேருக்கு தொற்று உறுதி

நுவரெலியா, ஜன.19

ஹற்றன் - கினிகத்தேனையிலுள்ள பாடசாலையொன்றில் 8 மாணவர்களுக்கும் ஆசிரியர்கள் மூவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து பாடசாலையின் தரம் 11, 12 ஆகிய வகுப்புகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதுடன் பாடசாலை முற்று முழுதாக தொற்றுநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து நேற்றைய தினம் 150 மாணவர்களே பாடசாலைக்கு சமுகமளித்தனர்.

இவர்களில் தொற்றுக்கான அறிகுறிகளுடன் பாடசாலைக்கு வந்த மாணவர்கள் வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். அத்துடன், 63 ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளித்துள்ளனர்.

பாடசாலைக்கு சமுகமளிக்காத மாணவர்களுக்கு,




நிகழ்தகை கற்றலின் மூலம் கற்பித்தல் செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை பாடசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தொற்றுக்குள்ளான மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணிய மாணவர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பாடசாலையில் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணிய 500 மாணவர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பாடசாலை அதிபர் தெரிவித்தார். (ஐ)

# மாட்டிறைச்சிக்கு விலை நிர்ணயம் விற்பனையாளர்கள் கடும் எதிர்ப்பு

ஓட்டமாவடி, ஜன. 19

கோறளைப்பற்று மேற்கு - ஓட்டமாவடி பிரதேச சபை, மாட்டிறைச்சி விற்பனை செய்ய நிர்ணயித்துள்ள விலையை கண்டித்து செவ் வாய்க்கிழமை முதல் அனைத்து மாட்டிறைச்சிக் கடைகளையும் மூட தீர்மானித்துள்ளதாக வரையறுக்கப்பட்ட கால்நடை இறைச்சி விநியோக தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம். எம். கமால் தெரிவித்தார்.

“ஓட்டமாவடி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் மாட்டிறைச்சி ஒரு கிலோ 1,000 ரூபாய்க்கும், கலவன் இறைச்சி 850 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ. எம். நௌபர் தலைமையில் கடந்த 16 ஆம் திகதி நடந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் எமது சங்கத்திலுள்ள இறைச்சிக் கடை உரிமையாளர்கள் கலந்து கொண்டு தங்களது நியாயமான காரணங்களை முன்வைத்த போதும் பிரதேச சபை அதனை மறுத்து தன்னிச்சையாக மாட்டிறைச்சிக்கு நிர்ணய விலையை மக்கள் மத்தியில் அறிவித்துள்ளது.



இதனால், எமது தொழிலாளர்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இறைச்சிக்காக அறுக்கப்படும் மாடுகளுக்கான தட்டுப்பாடு, வெளிப்பிரதேசங்களுக்கு மாடுகள் ஏற்றுமதி, மாட்டுக்கான விலை அதிகரிப்பு போன்ற காரணங்களை கருத்தில்கொண்டு எமது சங்கத்தால் ஒரு கிலோ தனி இறைச்சி 1,100 ரூபாய், இறைச்சி முள்ளுடன் 1,000 ரூபாய், ஒரு கிலோ ஈரல் 1,200 ரூபாய், பாபத் ஒரு கிலோ 500 ரூபாய், எனும் விலைகளில் விற்பனை செய்ய எமது சங்கம் தீர்மானித்துள்ளது.

எனவே, எமது இறைச்சிக் கடை உரிமையாளர்களின் நிலைமையை கருத்தில்கொண்டு, அவர்களின் தொழில் பாதிப்படையாமல் ஓட்டமாவடி பிரதேச சபை நிர்வாகம் நியாயமான தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். தங்களுக்கான நியாயம் கிடைக்கும் வரை ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட மாட்டிறைச்சிக் கடைகளை இன்று (நேற்று) முதல் மூடத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (ஐ)

# 3 ஆயிரம் சுற்றுலா பயணிகள் நாளாந்தம் இலங்கை வருகை!

கொழும்பு, ஜன. 19

இலங்கைக்கு நாளாந்தம் 3 ஆயிரம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகைத் தருவதாக சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்த வகையில், நேற்று முன்தினம் வரை நாட்டுக்கு 46 ஆயிரத்து 942 பேர் வருகை தந்துள்ளனர் என அந்த சபையின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக 22 வெளிநாட்டு விமான நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். பல விமான சேவை நிறுவனங்கள் இலங்கையுடன் விமான சேவை உறவுகளை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# கொரோனா தொற்றுக்கு இலக்காகும் சிறுவர்களின் எண்ணிக்கை உயர்வு!

கொழும்பு, ஜன.19

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில், கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களின் எண்ணிக்கை 31ஆக அதிகரித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

இந்த வைத்தியசாலையில் கடந்த மாதத்தின் தொடக்கத்தில், நான்கு சிறுவர்கள் மட்டுமே கொரோனா தொற்றுக்கு உள்ளான நிலையில் சிகிச்சை பெற்றனர்.

ஒமைக்ரோன் திரிபு தொற்றுப் பரவல் காரணமாக இந்த எண்ணிக்கை அதிகரித்திருக்கலாம். லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் வரும் சிறுவர்கள் ஒமைக்ரோன் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனரா என்பதை கண்டறிவதற்காக அவர்களின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தில், 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் அனைவரும் ஒரு தடுப்பூசியேனும் பெற்றுக்கொள்வது அவசியமாகும். பொதுமக்கள் பொது சுகாதார விதிமுறைகளை மறந்து செயற்பட்டு வருகின்றனர். திருமண நிகழ்வுகளில் முககக்கவசம் அணியாது பங்கேற்று வருகின்றனர்.

கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் கொரோனா தொற்றுக்குள்ளான சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள அதேவேளை டெங்கு நோய்க்கு உள்ளாகியுள்ள சிறு வர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியை காண முடிகின்றது என்றும் அவர் கூறினார். (கே)

# மஹரமை மருத்துவமனை தாதியர்கள் புறக்கணிப்பு

கொழும்பு, ஜன.19

கொழும்பு மஹரகம அபேக்ஸா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை பிரிவின் தலைமை தாதியை, விசேட மருத்துவர் ஒருவர் தாக்கிய சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, வைத்தியசாலையின் தாதியரகள் நேற்று காலை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

தாதியை தாக்கிய மருத்துவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியே இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

வைத்தியசாலையின் சுமார் 300 தாதியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். அத்துடன், வைத்தியசாலைக்கு முன்பாக சுமார் இரண்டு மணித்தியாலங்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

தாக்குதலில் காயமடைந்த தாதி, சிகிச்சைக்காக களுபோவிலை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (கே)

# ஆப்கானில் அடுத்தடுத்து இரண்டு நிலநடுக்கங்கள்

## 700 வீடுகள் சேதம்! இடிபாடுகளில் சிக்கி 26 பேர் பலி!!





காபூல், ஜன. 19

ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரண்டு நிலநடுக்கங்களால் நூற்றுக் கணக்கான வீடுகள், கட்டடங்கள் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளில் சிக்கி 26 பேர் பலியாகினர்.

துர்க்மெனிஸ்தான் எல்லையை ஒட்டிய பட்கிஸ் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் உள்நாட்டு நேரப்படி பிற்பகல் இரண்டு மணிக்கும் தொடர்ந்து இரண்டு மணி நேரங்கள் கழித்து 4 மணியளவிலும் நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

முதல் நிலநடுக்கம் 5.3 ரிச்டர் அளவிலும் இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு இரண்டாவது நிலநடுக்கம் 4.9 ரிச்டர் அளவிலும் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பட்கிஸ் மாகாண தலைநகரான கலா இ நாவில் இருந்து கிழக்கே 41 கிலோமீற்றர் தொலைவிலும், தென்கிழக்கே 50 கிலோமீற்றர் தொலைவிலும் இந்த நிலநடுக்கங்களின் மையப் பகுதிகள் இருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஆப்கானிஸ்தானை கடந்த ஒகஸ்ட் மாதம் நாட்டை தலிபான் கையகப்படுத்தியதன் பின்னர் அந்த நாடு பெரும் பொருளாதார மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது. ஆப்கானுக்கான சர்வதேச உதவிகள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளதுடன், வெளிநாடுகளில் உள்ள சொத்துகளும் முடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 26 பேர் பலியானதை ஆப்கான் அவசரகால விவகாரங்களுக்கான அமைச்சின் அவசர கால செயல்பாட்டு மையத்தின் தலைவர் முல்லா ஜனன் சாகே உறுதிப்படுத்தினார்.

அத்துடன், 700 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாக அவர் கூறினார். (அ)



# கனடாவிலிருந்து வந்த பொதியில் ஒமேகா-3!

## சீனா குற்றச்சாட்டு

பீஜிங், ஜன. 19

கனடாவில் இருந்து ஒரு பொதி மூலம் சீனாவில் ஒமேகா-3 பரவுவதாக சீன சுகாதார அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கனடாவிலிருந்து வந்த பொதியின் மேற்பரப்பு மற்றும் உள்ளடக்கங்கள் மற்றும் ஆவணங்களில் ஒமேகா-3கள் இருப்பதாக அதிகாரிகள் விளக்கினர்.

கடந்த ஜனவரி 11ஆம் திகதி கனடாவில் இருந்து சீனாவுக்கு சென்ற பொதியை வாங்கிய நபருக்கு கடந்த 15ஆம் திகதி ஒமேகா இருப்பது கண்டறியப்பட்டதாகவும், கடந்த ஜனவரி 7ஆம் திகதி கனடாவில் இருந்து இந்த பொதி அனுப்பப்பட்டு ஹொங்கொங், அமெரிக்கா, சீனா வழியாக பீஜிங் வந்ததாகவும் கூறப்படுகிறது.

டிசெம்பர் 2021ஆம் ஆண்டு வட அமெரிக்கா மற்றும் சிங்கப்பூரில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸைப் போலவே, ஒமேகா -3 பாதிக்கப்பட்ட நபரின் கொரோனா தொற்று சீனாவிலும் பதிவாகியுள்ளது.



# உக்ரைனுக்கு ஏவுகணை வழங்குகின்றது பிரிட்டன்

லண்டன், ஜன. 19

உக்ரைனின் தற்பாதுகாப்புக்காக குறுகிய தூர ஏவுகணைகளை வழங்குவதாக பிரிட்டன் பாதுகாப்புச் செயலாளர் அறிவித்துள்ளார்.

ரஷ்யா தனது நாட்டு எல்லையில் சுமார் 100,000 படையினரை நிலைநிறுத்தியதை அடுத்து, இவ்வாறு ஆயுதங்களை வழங்குவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

அத்துடன், தமது நாட்டின் ஒரு சிறிய படை குழுவினரையும் உக்ரைனுக்கு அனுப்பவுள்ளதாக பிரிட்டன் பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து உக்ரைனின் கடற்படையை வலுப்படுத்த ஆதரவு தெரிவிப்பதாக பிரிட்டன் அறிவித்திருந்ததை தொடர்ந்து 2015 ஆம் ஆண்டிலிருந்து உக்ரைனில் பிரிட்டன் படைகள் நிலைகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சூடானில் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடிய 7 பேர் சுட்டுப் படுகொலை!

கார்ட்டோம், ஜன. 19

சூடானில் இராணுவ ஆட் சிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது இராணுவத்தினர் சரமாரியாக சுட்டதில் 7 பேர் பலியாகினர். மேலும் பலர் காயமடைந்தனர்.

சூடானில் இராணுவ ஆட் சிக்கு எதிராக தொடர்ச்சியாக மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தலைநகர் கார்ட்டோமில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு பேரணியாக சென்ற போது அவர்களை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வன் முறையை கையில் எடுத்துள்ள தாக இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது. எனினும் ஜனநாயக எதிர்ப்பு போராட்டக்காரர்கள் இராணுவத்தின் குற்றச்சாட்டை மறுத்துள்ளனர். அமைதியான எதிர்ப்பாளர்களுக்கு எதிராக பாதுகாப்புப் படைகள் அதிக பலத்தை பயன்படுத்துவதாக அவர்கள் கண்டித்துள்ளனர்.

இதற்கிடையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடந்த கொடிய வன்முறைக்கு மத்தியில் சூடானில் உள்ள அனைத்துக் கட்சிகளும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என ஐ.நா. பாது காப்பு சபை 9 உறுப்பு நாடுகள் இணைந்து கூட்டாக வலியு றுத்தியுள்ளன.



2021, ஒக்ரோபர் 25 அன்று சூடானில் நடந்த இராணுவ சதிப்புரட்சி குறித்து எங்களின் தீவிர கவலையை நாங்கள் தெரி விக்கிறோம் என இங்கிலாந்து, மெக்சிக்கோ, அல்பேனியா, பிரேசில், காபோன், கானா, அயர்லாந்து மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15 உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்புச் சபை கூட்டத்துக்கு பிறகு வெளியி டப்பட்ட அறிக்கையில் வன் முறையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் அமைதி யாக ஒன்று கூடுவதற்கான உரிமைகள் மற்றும் கருத்துச் சுதந்திரம் உட்பட மனித உரிமைகளை உறுதிப்படுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கறிஞர் கரீம் கான் பங்கேற்றார்.

# பிரான்ஸில் ஆசிரியர் சங்கங்கள் ஒரு நாள் வேலைநிறுத்த போராட்டம்

பரிஸ், ஜன. 19

பிரான்ஸில் கொரோனா பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்தல் நெறிமுறைகளை கண்டித்து, ஆசிரியர் சங்கங்கள் ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன.

எதிர்வரும் வியாழக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள இந்த போராட்டம், ஜனவரி 27ஆம் திகதி மிகப்பெரிய அளவில் நடைபெற உள்ள நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு முன்னோட்டமாக இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக அளவில் மாணவர்களை பாடசாலையில் வைத்திருக்கும் வகையிலான தெளிவான விதிகளை ஏற்படுத்த அதிகாரிகள் தவறிவிட்டதாக ஆசிரியர்கள் சங்கங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

ஒமைக்ரோன் பரவல் காரணமாக, பாடசாலைகளின் வகுப்புகளை நடத்துவதற்கு தொடர்ந்து இடையூறு ஏற்படுவதாகவும், பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தடுப்பூசி பெற முடியாமல் சிரமப்படுகிறார்கள், மருந்தகங்களுக்கு வெளியே பரிசோதனைகளுக்காக நீண்ட வரிசையில் காத்திருக்கிறார்கள் எனவும் ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

பாடசாலைகள் இடையூறு இன்றி நடப்பதற்கு ஏதுவாக, பாடசாலை ஊழியர்களுக்கு 5 மில்லியன் உயர்தர முக கவசங்களை வழங்குவதாகவும், கொரோனா தொற்று ஏற்பட்ட ஆசிரியர்கள் அல்லது பாதிக்கப்பட்ட நபருடன் தொடர்பில் இருந்து, தனிமைப்படுத்தப்படவேண்டிய கட்டாயத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு பதிலாக 3,000க்கும் மேற்பட்ட மாற்று ஆசிரியர்களை நியமிப்பதாகவும் அரசாங்கம் உறுதி அளித்தது.

ஆனால், இதனை ஏற்க மறுத்த ஆசிரியர் சங்கங்கள், ஜனவரி 27ஆம் திகதி மிகப்பெரிய அளவில் நடைபெற உள்ள நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

இதனிடையே, கொரோனா வேகமாக பரவி வருவதால், பணிக்கு வர முடியாத ஆசிரியர்களுக்கு பதிலாக போதுமான மாற்று ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று ஆசிரியர் சங்கங்கள் கூறுகின்றன.

(அ)

### இளையோர் உலகக்கிண்ணம்

# அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது இலங்கை!



சென். கிட்ஸ், ஜன. 19

இளையோர் உலகக் கிண்ணப் போட்டியில் அவுஸ்திரேலியா அணியை 4 விக்கெட்களால் வெற்றி கொண்டது இலங்கை அணி.

19 வயது பிரிவினருக்கான கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடர் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வருகின்றது.

இதில், 9ஆவது போட்டியில் டி பிரிவு அணிகளான இலங்கை, அவுஸ்திரேலியா அணிகள் திங்கட்கிழமை சென். கிட்ஸில் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி இலங்கை முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதனால், அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்களையும் இழந்த அவுஸ்திரேலியா 175 ஓட்டங்களையேமாத்திரம் பெற்றது. காம்ப்பெல் கெல்லவே மாத்திரம் 54 ஓட்டங்களை பெற்றார்.

இலங்கையின் பந்துவீச்சில், அணித் தலைவர் துனித் வெல்லலகே 28 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை எடுத்து அசத்தினார். தவிர டிரெவின் மத்தியூ, மதீஷ பத்திரண ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், சதீச ராஜபக்ஷ ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

176 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய இலங்கைக்கு அணியின் ஆரம்ப வீரர்கள் கைகொடுக்கவில்லை. அதனால் 49 ஓட்டங்களுக்குள் அணியின் முதல் நான்கு விக்கெட்களும் சரிந்தன. எனினும், 5ஆவது வீரராக களமிறங்கிய அணித் தலைவர் வெல்லாலகே 71 பந்துகளில் 52 ஓட்டங்களை பெற்றார். அவர் தவிர அஞ்சல பண்டார 33 ஓட்டங்களையும் மற்றும் ரனுத சோமரத்ன 32 ஓட்டங்களையும் பெறவே இலங்கை அணி இலகுவாக வெற்றியை நோக்கி நகர்ந்தது.

இறுதியாக இலங்கை 37 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 177 ஓட்டங்களைக் குவித்து வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக 5 விக்கெட்கள் மத்திரம் 52 ஓட்டங்களை குவித்த இலங்கை அணித் தலைவர் துனித் வெல்லாலகே தெரிவானர்.உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி பெற்ற இரண்டாவது வெற்றி இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



### அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ்:

## பிரபல இளம்வீராங்கனை லேலா முதல் சுற்றிலேயே வெளியேற்றம்!

மெல்பர்ன், ஜன. 19

அமெரிக்க ஓப்பன் போட்டியில் இறுதிச்சுற்று வரை முன்னேறிய லேலா பெர்னாண்டஸை அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டியின் முதல் சுற்றில் மேடிசன் இங்லிஸ் தோற்கடித்தார்.

கடந்த வருடம் நடைபெற்ற அமெரிக்க ஓப்பன் ரென்னிஸில் தரவரிசையில் 73ஆம் இடத்தில் இருந்த 19 வயது லேலா பெர்னாண்டஸ் முன்னணி வீராங்கனைகளை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றிருந்தார். அந்தப் போட்டியில் பிரிட்டனின் எம்மா ரடுகானு வெற்றி பெற்றபோதிலும், லேலா இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸின் முதல் சுற்றுப் போட்டியில் லேலா நேற்று மேடிசன் இங்லிஸை (தரவரிசையில் 133ஆவது இடம்), லேலா (23ஆவது இடம்) எதிர்கொண்டார். இந்தப் போட்டியில், 6-4, 6-2 என நேர் செற்களில் லேலாவைத் தோற்கடித்த மேடிசன் 2-வது சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)

## லக்னோ அணி தெரிவுசெய்த வீரர்கள் பட்டியல் வெளியீடு!

புதுடில்லி, ஜன. 19

ஐ. பி. எல். தொடரில் புதிய அணியாக களமிறங்கவுள்ள லக்னோ அணி மூன்று வீரர்களை தக்கவைப்பு வீரர்களாக அறிவித்துள்ளது.

கே. எல். ராகுல் (இந்தியா), மார்கஸ் ஸ்ரொய்னிஸ் (அவுஸ்திரேலியா), பிஸ்னாய் (இந்தியா) ஆகிய வீரர்களையே அந்த அணி தக்கவைப்புக்காக தெரிவு செய்துள்ளது.

இதில், கே. எல். ராகுலுக்கு 15 கோடி இந்திய ரூபாயும், ஸ்ரொய்னிஸுக்கு 11 கோடி இந்திய ரூபாயும், பிஸ்னாய்க்கு 4 கோடி ரூபாயும் சம்பளமாக வழங்கப்படவுள்ளது. அத்துடன், லக்னோ அணியின் தலைவராக நியமிக்கப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





## அகமதாபாத் அணியின் வீரர்கள் விவரம் வெளியீடு

அகமதாபாத், ஜன. 19

ஐ. பி. எல்லின் புதிய அணியான பாண்ட்யா, ரஷீத் கான், சுப்மன் கில் ஆகியோர் இணைந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அணியின் தலைவராக ஹார்திக் பாண்ட்யா தேர்வாகியுள்ளார். பாண்ட்யா, ரஷீத் கான் ஆகிய இருவருக்கும் தலா 15 கோடி இந்திய ரூபாயும், சுப்மன் கில்லுக்கு 7 கோடி இந்திய ரூபாய் சம்பளமும் வழங்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அகமதாபாத் அணி பயிற்சியாளர் குழுவில் கேரி கிரிஸ்டன், ஆஷிஷ் நெஹ்ரா, இங்கிலாந்து முன்னாள் இந்திய வீரர் விக்ரம் சோலங்கி ஆகியோரும் இணைந்துள்ளனர். உத்தியோகபூர்வ தகவல்கள் விரைவில் வெளியாகும். (ஐ)

# ஐ. பி. எல்லில் பங்கேற்க பென் ஸ்ரோக்ஸ் மறுப்பு



லண்டன், ஜன. 19

இந்த ஆண்டுக்கான ஐ. பி. எல். 2022 போட்டியில் பங்கேற்க பென் ஸ்ரோக்ஸ் மறுத்துள்ளார்.

ஐ. பி. எல். வீரர்கள் ஏலம் அடுத்த மாதம் 12, 13ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. ஏலத்தில் பங்கேற்போர் இந்த மாதத்துக்குள் தங்கள் பெயர்களை அனுப்பவ வேண்டும்.

இந்த நிலையில், 8 அணிகளும் தக்கவைக்கும் வீரர்களின் பெயர்களை வெளியிட்டன. இதனிடையே புதிதாக களமிறங்கும் 3 வீரர்களை தக்கவைக்கும் வீரர்களாக அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இங்கிலாந்தின் பிரபல வீரர் பென் ஸ்ரோக்ஸ் ஐ. பி. எல். இருபது - 20 போட்டியில் பங்கேற்க மறுத்துள்ளார். தாய் நாட்டுக்கான கிரிக்கெட்டில் கவனம் செலுத்தவே அவர் வாய்ப்பை மறுத்துள்ளார் என்று கூறப்பட்டது. அத்துடன், கவுண்டி அணியில் விளையாடி பயிற்சி பெறவுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக இங்கிலாந்து அணியின் ஜோ ரூட்டும் ஐ. பி. எல். தொடரில் விளையாடுவதில்லை என்று மறுப்புத் தெரிவித்துள்ளார். (ஐ)

# வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை தீர்ப்புக்கு சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம்

கொழும்பு, ஜன. 19

வெலிக்கடை சிறைச்சாலை சம்பவத்தைப் பொறுத்தமட்டில் சிரேஷ்ட அதிகாரிகள் சிலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அது குறித்த விசாரணை ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தபோதிலும், எமில் ரஞ்சன் லமாஹேவகே மாத்திரமே தண்டிக்கப்பட்டிருக்கின்றார். ஒரேயொரு அதிகாரியை மாத்திரம் பொறுப்புக் கூறச்செய்வதும் தனியொரு நபருக்கு எதிராக மாத்திரம் மரண தண்டனை விதிப்பதும் வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகளுக்குத் தூண்டுகோலாக அமைந்த விடயங்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு எவ்வித பங்களிப்பையும் வழங்க வில்லை என்று 5 சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கூட்டாகச் சுட்டிக்காட்டியுள்ளன.

அதேவேளை, இலங்கையில் தற்போதும் மரணதண்டனை பயன்பாட்டில் இருப்பதைக் கடுமையாகக் கண்டித்துள்ள அந்த அமைப்புக்கள், மரண தண்டனையை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளன.

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சமூகப் படுகொலைகள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப்பிரிவின் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நியூமால் ரங்கஜீவ கடந்த 12 ஆம் திகதி மேல்நீதிமன்றத்தினால் அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டார்.

அதேவேளை, அவருடன் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த மகஸின் சிறைச் சாலையின் முன்னாள் அத்தியட்சகர் எமில் ரஞ்சன் லமாஹேவகே 33 ஆவது குற்றச்சாட்டு தொடர்பில் குற்றவாளியாகக் காணப்பட்ட நிலையில் அவருக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந் நிலையில் எமில் ரஞ்சனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டமை தொடர்பில் மரண தண்டனைக்கு எதிரான ஆசிய வலையமைப்பு, உச்சபட்ச தண்டனை குறித்த நீதிச்செயற்திட்டம், மனித உரிமைகளுக்கான சர்வதேச பேரவை, மொனாஷ் பல்கலைக்கழகத்தின் எலியோஸ் நீதி மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகிய 5 சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் இணைந்து கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட விடயத்தை கூறியுள்ளன.



யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு
அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோவில்
மஹாகும்பாபிஷேகம்
பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகம்
காலம் : 23.01.2022 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 10.32-11.22 வரையுள்ள சுபவேளை

கர்மாரம்பம் :
19.01.2022 புதன்கிழமை காலை 5.30 மணி

எண்ணெய்க்காப்பு
காலம் : 22.01.2022 சனிக்கிழமை
காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 3மணிவரை

தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற திருவருள்பாலித்துள்ளது. கும்பாபிஷேக திருநாளிலும், அதற்கு முன்நடைபெறும் கர்மாரம்ப கிரியைகளிலும் அடிய வர்கள் அனைவரும் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றி ஆசாரசீலர்களாக கலந்து கொண்டு எம்பெருமானை வழிபட்டு இஷ்ட சித்திகளனைத்தையும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'

பிரதிஷ்டா பிரதம குரு : சிவாச்சார்யதிலகம்
சிவஸ்ரீ சதா.இராதாகிருஷ்ணக் குருக்கள்
(கல்வியங்காடு)

ஆலய பிரதம குரு:
சிவஸ்ரீ
சதா.யோகீஸ்வரக்குருக்கள்
(கல்வியங்காடு)

ஆலயக் குரு:
சிவஸ்ரீ
முத்து. ஸ்ரீநிவாசககுருக்கள்
(கல்வியங்காடு)

சர்வபோதகம் : வேதாகம ஞானபாஸ்கரன்
சிவஸ்ரீ தாணுமஹாதேவா
சிவாச்சாரியார்
(அதிபர், இணுவில் தர்மசாஸ்தா குருகுலம்)

நிர்மாண ஸ்தபதி :
தமிழ்நாடு கும்பகோணம்
திரு.கி.மணிகண்டன் குழுவினர்

மங்கள வாத்தியம் :
திரு.S.செல்வகுமார் குழுவினர்
(திருநெல்வேலி)

வர்ண வேலைகள் :
திரு.சபேசன் குழுவினர்
கல்வியங்காடு

ஒளி ஒலி அமைப்பு :
குமார் சவுண்ட்
நல்லூர்

சந்திரசேகரப்பிள்ளையார் மேற்குப்புற வாசல்
அலங்கார வளைவு திறப்பு விழா,
ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கலாசார மண்டப புகுவிழா
காலம் : 19.01.2022 புதன்கிழமை காலை 6.45 மணி
பஞ்சதளநாயகன் இறுவட்டு வெளியீட்டு விழா
காலம் : 20.01.2022 வியாழக்கிழமை மாலை 6 மணி

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தான
அறங்காவல்குழு.

# பெரமுன இல்லாவிட்டால் சு.கவுக்கு படுதோல்வியே!

## அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன கூறுகிறார்



கொழும்பு, ஜன.19

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டி யிட்டிருக்காவிட்டால் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி படுதோல்வி அடைந்திருக்கும் - என்று அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் எமக்கு நன்மை பயக்கவில்லை. மொட்டு கட்சியால்தான் சுதந்திரக்கட்சி பயன் அடைந்தது. எம்முடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டதால்தான் 14 ஆசனங்கள் அக் கட்சிக்கு கிடைக்கப்பெற்றது. அவ்வாறு இல்லாவிட்டால் ஒருவர்கூட வெற்றிபெற்றிருக்க முடியாது.

சுதந்திரக்கட்சி தனக்கான நம்பிக்கையை இழந்துவிட்டது. எனவே, இருக்கமுடியாவிட்டால், விமர்சனங்களை முன்வைத்துக் கொண்டிருக்காது, வெளியேற வேண்டும்- என்றார். (அ)

# 'வெளிநாட்டவர்களுக்கு மட்டும்' என்ற கொள்கையை கடைப்பிடிக்கக்கூடாது

கொழும்பு, ஜன. 19

வெளிநாட்டவர்களுக்கு மட்டும் என விளம்பரங்களைக் காட்டி உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்குச் சேவைகளை வழங்காத உல்லாச விடுதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இலங்கைப் பிரஜைகளுக்கு எதிராக சில சுற்றுலா நிறுவனங்கள் பின்பற்றும் பாரபட்சமான நடைமுறைகள் தொடர் பில் தங்களுக்கு முறைப்பாடுகள் கிடைத் துள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதி கார சபை அறிக்கையொன்றில் தெரிவித் துள்ளது.

அந்த அறிக்கையில், "எங்கள் அரசமைப்பு அனைத்து குடிமக்களுக்கும் சமமான உரிமையை வழங்குகிறது. அங்கு எந்தவொரு நபரும், இனம், மதம், மொழி, சாதி, பாலினம் அல்லது அத்தகைய அடிப்படையில் எந்தவொரு இயலாமை, பொறுப்பு, கட்டுப்பாடு அல்லது அணுகல் தொடர்பான நிபந்தனைகளுக்கு உட்படுத்தப்படக்கூடாது.

உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கடினமான காலங்களில் சுற்றுலாத்துறைக்கு ஆதரவாக நின்றனர். எங்கள் தொழில் துறையை முழுவதுமாக ஆதரித்தவர்கள் எங்கள் குடிமக்கள் தான். அதற்காக, தொழில் பங்குதாரர்களாகிய நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

அதே நேரத்தில், உள்நாட்டுப் பயணிகளும் சுற்றுலாச் சொத்துக்கள் நன்கு பராமரிக்கப்படுவதையும் ஹோட்டல்களின் தேவைகளைப் பின் பற்றுவதையும் தொழில் மற்றும் நாட்டிற்கான பிராண்ட் தூதுவர்களாக இருப்பதையும் உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (அ)

# இருவேறு இடங்களில் மாயமான ஆண், பெண் சடலங்களாக மீட்பு!

கொழும்பு, ஜன. 19

கேகாலை, களுத்துறை ஆகிய மாவட்டங்களின் இருவேறு பிரதேசங்களில் காணாமல்போன இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக கேகாலை, தெஹியோவிட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறிய மழை பகுதியில் கற்குழியிலிருந்து ஆண் ஒருவரின் சடலத்தை தெஹியோவிட்ட பொலிஸார் மீட்டுள்ளனர்.

அட்டளுகம வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயது நபரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் காணாமல்போயிருந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


இதேவேளை, களுத்துறை, அளுத்கம பிரதேசத்தில் காணாமல்போயிருந்த பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அளுத்கம புளியங்குளம் பிரதேசத்தை சேர்ந்த 57 வயது பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

செங்கல் உற்பத்தி செய்யப்படும் இடத்திலிருந்து குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைவாகவே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# நாவற்குழியில் கப் வாகனம் மின்கம்பத்துடன் மோதியது!



யாழ்ப்பாணம், ஜன. 19

நாவற்குழிப் பகுதியில் வேக கட்டுப்பாட்டை இழந்த கப் வாகனம் மின்கம்பத்துடன் மோதி விபத்துக் குள்ளாகியது.

இந்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

ஏ-9 வீதி ஊடாக பயணித்துக் கொண்டிருந்த கப் வாகனம் வேக கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக் குள்ளானது.

சம்பவத்தில் சேதமடைந்த மின்கம்பம் அருகிலிருந்த மின்மாற்றியுடன் மோதி கம்பிகள் அறுந்தன. இதனால் தென்மராட்சியின் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டது.

இந்த விபத்தில் வாகனம் சேதமடைந்தபோதும் அதில் பயணித்தவர்கள் ஆபத்தின்றி தப்பினர்.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## இந்திய...

நேற்று மாலை 5 மணிக்கு இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயே தமிழ் கட்சிகளின் தலைவர்கள் சந்தித்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இந்தியப் பிரதமருக்கான கடிதத்தைக் கையளித்தார்.

ரெலோ கட்சியின் ஏற்பாட்டில் தயாரிக்கப்பட்ட இந்தக் கடிதத்தை இரா. சம்பந்தன் தூதுவரிடம் கையளித்தபோது, தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன், ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், மற்றும் கூட்டமைப்பின் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. ரெலோ கட்சியின் பேச்சாளர் கு. சுரேந்திரன் ஆகியோரும் உடனிருந்தனர்.

கையளிக்கப்பட்ட கடிதத்தில், இனப் பிரச்னைக்கான தற்காலிக தீர்வாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும், 16ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவும் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் வழங்குமாறும், இனப்பிரச்னைக்கான தீர்வாக கூட்டு சமஷ்டியை ஏற்படுத்த உதவுமாறும் இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியப் பிரதமரை கோருவதற்காக ரெலோ கட்சியின் அழைப்பின் பேரில் முதலாவது கூட்டம் யாழ்ப்பாணத்தில் நவம்பர் 2ஆம் திகதி இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் மலையக மக்களை பிரதிநிதித்துவப் படுத்தி மனோ கணேசன் எம்.பியின் கட்சியும், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் ரவூப் ஹக்கீமின் கட்சியும் பங்கேற்றன.

இதைத் தொடர்ந்து டிசெம்பர் 12ஆம் திகதி கொழும்பில் கூடிய தமிழ் பேசும் கட்சிகள் பொது ஆவணத்தைத் தயாரித்தன. இந்த ஆவணத்தில் அனைத்துக் கட்சிகளும் முதலில் கையொப்பமிட இணங்கின. எனினும் பின்னர், மலையக, முஸ்லிம் கட்சிகள் கையொப்பமிட பின்னடித்த நிலையில் வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளின் தலைவர்கள் மட்டும் கையொப்பமிடுவது என முடிவானது. இவ்வாறு அந்தக் கடிதத்தில் கையொப்பமிட்ட கட்சிகளின் தலைவர்களே நேற்றைய தினம் தூதரை சந்தித்து கடிதத்தைக் கையளித்தனர்.

இதைத் தொடர்ந்து இரு தரப்பினரும் பேச்சில் ஈடுபட்டநிலையில், பேசப்பட்ட விடயங்கள் குறித்து எதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ)

## இந்தியாவை...

யில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒளிபரப்பான ஸ்பொட்லைற் நிகழ்ச்சிக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“ராஜபக்ஷ அரசாங்கத்தை எப்படி கையாள வேண்டும் என்பதற்காக இந்தியா தமிழ் அரசியலைக் கையாளும். பூகோள அரசியலுக்கு ஏற்றபடி - சீனாவின் வருகை - சீனத் தூதுவரின் வடக்கு வருகை - பூகோள அரசியலின் நெருக்கடி என்பவற்றால் - எப்போதும் இலங்கையை தன் பிடிக்குள் வைத்திருப்பதற்காக இந்தியா 13 குறத்து பேசுகிறதா அல்லது இதற்காகதான் தமிழ் தலைவர்களை வைத்திருக்கிறார்களா என்று ஒரு குற்றச்சாட்டு உள்ளதே?”, என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த சித்தார்த்தன் எம். பி.,

“இதை மறுபக்கமாகவும், பார்க்கலாம் அல்லவா? இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் இருக்கக்கூடிய முறுகல் நிலை - சீனா இங்கு வந்துள்ள நிலைமை என இந்த நிலைமைகளில் இந்தியாவை பாவிக்க வேண்டும் என்று நாங்கள் -தமிழ் தலைவர்கள் - நானோ, செல்வமோ, விக்னேஸ்வரன் ஐயாவோ மற்றத் தலைவர்களோ யோசித்திருக்கலாம் அல்லவா?

“13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாது செய்ய வேண்டும் என்ற நிலையும் இலங்கையில் வருகிறது. புதிய அரசமைப்பு பற்றி அரசாங்கம் சிந்தித்து வருகின்றது. 13ஆவது திருத்தச் சட்டம் இருந்தால் மட்டுமே இந்தியா எதிர்காலத்திலும் தலையிட முடியும். இதன் மூலமே தமிழர்கள் இறுதி தீர்வை அடையவும் முடியும். புதிய அரசமைப்பு வந்தால் இந்தியா அதன்பின்பு தலையீடு செய்ய முடியாதிருக்கும்” என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## வடக்கு-கிழக்கில்...

கொள்கை விளக்க உரையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாப் பெருந்தொற்றிலிருந்து எமது மக்களைக் காக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பொது முடக்கத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்படவில்லை. தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்பட்டன. வைத்தியசாலை கட்டமைப்புக்கு சுமார் 35 ஆயிரம் கட்டில்கள் இணைக்கப்பட்டன. தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா நிவாரணப் பொதி வழங்கப்பட்டது.

மாறுபட்ட அரசியல் நிலைப்பாடுகள் இருந்தாலும் நாட்டின் நன்மைதான் அனைவரினதும் இலக்கு. எனவே, அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டை முன்னோக்கி அழைத்துச் செல்ல எதிரணிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் மக்களுக்கு உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. கொரோனாவால் இரண்டு ஆண்டுகள் பல தடைகள் ஏற்பட்டன. ஆனாலும் எமது பொறுப்பை நாம் மறக்கவில்லை.

நான் ஆட்சிக்கு வரும்போது தேசிய பாதுகாப்புதான் பிரச்சினையாக இருந்தது. அந்தப் பாதுகாப்பை உறுதிப்படுத்தினேன். பாதாளக் கோஷ்டியின் அச்சுறுத்தலுக்கு முடிவு கட்டினேன். மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது-என்றார். (அ)

## தேநீர்...

தீர்வு விடயம் குறித்து எதுவுமே குறிப்பிடப்படவில்லை.

அத்தோடு தற்போது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கான தீர்வு குறித்து எவ்வித அறிவிப்பையும் ஜனாதிபதி வெளியிடவில்லை.

இந்நிலையில், ஜனாதிபதியின் உரை முடிந்த பின்னர் இடம்பெற்ற தேநீர் விருந்துபசார நிகழ்வை கூட்டமைப்பு புறக்கணித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (அ)

## இலங்கைக்கு...

அந்த கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் 900 மில்லியன் டொலர் நிதிப்பரிமாற்ற வசதியை இந்தியா வழங்கி இருந்தது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் இருதரப்பு பொருளாதார வர்த்தக தொடர்புகளின் பாரிய பங்களிப்பாக இந்த சலுகைகள் வழங்கப்பட்டிருப்பஷதாகவும் இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

## வடக்கு-கிழக்கு...

மக்களுக்கு நன்மைதரும் வகையில் அரசாங்கத்தின் செயல் பாடுகளுக்கு ஆதரவு வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

9ஆவது பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்வில் கலந்து கொண்டு கொள்கைவிளக்க உரை நிகழ்த்தும் போதே ஜனாதிபதி கோட்டாபய இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# இலங்கையில் மனித உரிமைகளை உறுதிசெய்ய பிரிட்டன் ஆதரவளிக்கும்!

கொழும்பு, ஜன. 19

இலங்கையில் சிறந்த நிர்வாகத்தை வலுப்படுத்துவதுடன் அனைத்துப் பிரஜைகளுக்குமான மனித உரிமைகளை உறுதி செய்வதை முன்னிறுத்தி செயல் ஷபட்டு வருபவர்களுக்கு ஆதரவை வழங்குவதில் பிரிட்டன் உறுதியாக இருப்பதாக அந்த நாட்டின் பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் தாரிக் அஹமட் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இன்று வருகைத தரவுள்ள அவர் தனது, அறிவிப்பில்,

“கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் வசிக்கக்கூடிய அனைத்து இனங்களைச் சேர்ந்த மக்களையும் சந்திப்பதற்குத் திட்டமிட்டிருக்கின்றேன்.

உலகளாவிய வர்த்தகம், முதலீடு மற்றும் பரஸ்பர பாதுகாப்பு ஆகியவற்றில் இந்திய - பசுபிக் பிராந்தியத்தின் முக்கியத்துவம் குறித்து பிரிட்டன் விசேட அவதானம் செலுத்தியுள்ளது.

அதன் தொடர்ச்சியாக பிரிட்டன் பொருளாதார ரீதியான தொடர்புகளை அடிப்படையாகக்கொண்ட வலையமைப்பைக் கட்டியெழுப்பிவரும் அதேவேளை, இவ்விடயத்தில் இலங்கையுடன் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு எதிர்பார்த்துள்ளது. அத்துடன், இலங்கையில் சிறந்த நிர்வாகத்தை வலுப்படுத்துவதுடன் அனைத்துப் பிரஜைகளுக்குமான மனித உரிமைகளை உறுதிசெய்வதை முன்னிறுத்தி செயல்பட்டு வருபவர்களுக்கு ஆதரவை வழங்கவேண்டும் என்பதில் நான் தெளிவாக இருக்கின்றேன்.

பொதுநலவாய அமைப்பில் பிரிட்டனும் இலங்கையும் நீண்டகாலமாக அங்கம்வகிப்பதுடன் சர்வதேசத்தின் கரிசனைக்குரிய பல்வேறு விடயங்களில் ஒன்றிணைந்து செயலாற்றி வந்திருக்கின்றன. அவற்றில் காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகள் முக்கியமானவை - என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## மின் தடை...

வளக் கூட்டுத்தாபனமும் எண்ணெய் வழங்க மறுத்துள்ளது.

இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்துடன் மின்சக்தி வளத்துறை அமைச்சு பேச்சு நடத்தியது.

எனினும் மின்சார சபை முன்வைத்த கோரிக்கையை இலங்கை மற்றும் இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் மறுத்துள்ளது.

இந்நிலையில் எண்ணெய் பெற்றுக் கொள்வது தொடர்பாக மத்திய வங்கியுடன் பேச்சு நடத்தப்படுவதாக அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். (அ)

## காணாமல்...

டாபய.

கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா தொற்று காரணமாக இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டும் வருவதற்கு, கட்சி பேதங் களின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

9ஆவது பாராளுமன் றத்தின் இரண்டாவது அமர்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

நாங்கள் சர்வ தேச சட்ட திட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள் என்ப வற்றை மதிக்கும் ஓர் நாடாக விளங்குகின்றோம். கடந்த காலங் களில் எமது நாட்டில் மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேச ரீதியில் எடுத்துச் செல்லப்பட்ட தவறான கருத்துக்களை சீர்செய்யும் பொறுப்பு எங்களுக்கு உள்ளது. எனது ஆட்சிக் காலத்தில் எந்தவொரு விதத்திலும் மனித உரிமை மீறல்களுக்கு எமது அரசு உடந்தையாக இருக்கவில்லை. அதேபோன்று எதிர்காலத்திலும் அவ்வாறான நிலைமைகள் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறான செயற்பாடுகளை நாங்கள் அங்கீகரிப்பதும் இல்லை.

யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கையை வழமை நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நாங்கள் பாரிய முதலீடுகளைச் செய்துள்ளோம்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு அமைய விடுவிப்பதற்குக் கடந்த நாட்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எதிர்காலத்திலும் அவ்வாறான பலரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பயங்கரவாத தடை சட்டத்தில் காலத்துக்கு ஏற்ற மாற்றங்களைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசியல் இலாபத்துக்காக மக்களை உசுப்பேற்றும் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் - என்றார். (அ)

## மினி சூறாவளி...

கரணவாயின் ஜே -348, 350 கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்தவர்களே மினி சூறாவளியால் பாதிக்கப்பட்டனர். இதனால், 15 வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் யாழ்ப்பாணத்தில் 119.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## கோட்டாபயவின்...

பாராளுமன்றத்தில், புதிய ஆண்டுக்கான கூட்டத்தொடரை நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொள்கை விளக்க உரையுடன் ஆரம்பித்து வைத்தார். இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே எம். ஏ. சுமந்திரன் எம். பி. மேறகண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், “ஜனாதிபதியின் பேச்சை செவிமடுத்த கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அதையொட்டி இன்று பெரும் கோபம் கொண்டார். பேச்சு முடிந்த கையோடே எழுந்து பாராளுமன்றில் பகிரங்கமாகத் தம் எதிர்ப்பை பதிவு செய்ய அவர் விரும்பினார். அதற்காக எழுந்தார். எனினும், யோசித்தவர், பாராளுமன்ற சம்பிரதாயங்களை மீறி நடக்கக் கூடாது என்பதற்காக அப்படி கருத்துத் தெரிவிப்பதைத் தவிர்த்துக் கொண்டார்.

ஆனால், பாராளுமன்றை விட்டு வெளியே வரும்போது ‘லொபி’யில் தமக்கு முன்னால் எதிர்ப்பட்ட நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் தமது கோபத்தை சம்பந்தன் ஐயா காட்டினார். ஜனாதிபதியின் இந்தப் பேச்சு வெறும் குப்பை. உருப்படியாக இதில் எதுவும் இல்லை. இதைப் போய் அவரிடம் சொல்லுங்கள். நான் தேநீர் உபசாரத்துக்கு வரவில்லை. வந்தால் இதை நானே அவருக்கு நேரடியாகக் கூற வேண்டியிருக்கும். அப்படி வேண்டாம் என்பதற்காகத்தான் தேநீர் உபசாரத்தையே தவிர்த்துக் கொண்டிருக்கின்றேன். இந்தப் பேச்சு வெறும் குப்பை தவிர வேறு எதுவுமில்லை என்பதை நான் கூறினேன் என்பதை அவரிடம் போய்ச் சொல்லுங்கள். எங்களுடைய நாட்டின் தேசிய பிரச்னை குறித்து ஏதும் இந்தப் பேச்சில் சொல்லப்படவில்லை. இந்தப் பிரச்னை தீர்க்கப்படாவிட்டால் உங்களுக்கு எதுவும் சரிப்பட்டு வராது - உருப்படவே மாட்டீர்கள் என்பதை அவரிடம் போய்ச் சொல்லுங்கள் என்று சம்பந்தன் ஐயா சீற்றத்துடன் கூறினார்.

இந்தத் திடீர் தாக்குதலை எதிர்பார்க்காத பஸில் ராஜபக்ச விடயத்தைச் சமாளித்து, “தாங்க்யூ, தாங்க்யூ...!“ என்று கூறி அங்கிருந்து அகன்றார்” - என்றும் சுமந்திரன் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மரண அறிவித்தல்



மலர்வு 06 - 12 - 1950

உதிர்வு 12 - 01 - 2022

## திருமதி செல்வராணி இராஜலிங்கம்

யாழ். அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் இவ்றி சூ செயின் (Ivry-sur-Seine ) நகரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி இராஜலிங்கம் அவர்கள் 12-01-2022 புதன்கிழமை அன்று பிரான்சில் காலமானார் .

அன்னார், காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், இராஜலிங்கம் (S.R) அவர்களின் அன்பு மனைவியும், கமலராசன், குகனி, காலஞ்சென்ற குகராசன், ராஜரூபி, கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மிலா, பரமானந்தம், சசிதரன், அருண்குமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற சாந்தலிங்கம், ஆனந்தலிங்கம், ராஜேஸ்வரி, கணேசலிங்கம், யோகேஸ்வரி, கனகரத் தினம், மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவசாந்தரூபி, ஜெயலட்சுமி, சோதிலிங்கம், தவமலர், சிவானந்தன், பாசமலர், சாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும், புறாந்தகி மகேஷ், இந்திரன், பானுமதி ஆகியோரின் அன்புச் சித்தியும், கிரிஸ், சாருஸ், இஷா, ஹரிணி, ஹர்ஷன், ஹாசினி, சஞ்சய், ரித்திக், அஸ்வின், அத்விக், ஆருஷன், சச்சின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் விபரம்

**கிரியை**

வியாழக்கிழமை 9.00 மணி முதல் 11.45 மணி வரை

முகவரி :Cimetière Intercommunal des Joncherolles
95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

**தகனம்**

வியாழக்கிழமை 20.01.2022 இறுதி அஞ்சலியும் தகனமும் 1.30 மணி முதல் 14.30 வரை

முகவரி: Chemin des Plâtrières, Tremblay-en-France:

தொடர்புகளுக்கு :

**இராஜலிங்கம் (கணவர்) - 0033149600703**
**கமல் (மகன்) - 0033625064596**
**குகனி (மகள்) - 00447404844392**
**ரூபி (மகள்) - 0033760237511**
**கார்த்திகா (மகள்) - 0033611354574**

தகவல்:
**குடும்பத்தினர்.**







## மின்சார சபைக்கு எரிபொருள் வழங்க லங்கா ஐ. ஓ. சி. மறுப்பு

*கொழும்பு, ஜன. 19*

*எரிபொருள் பற்றாக்குறை காரணமாக இலங்கை மின்சார சபைக்கு எரிபொருளை வழங்குவதற்கான மின் சக்தி அமைச்சின் கோரிக்கையை லங்கா ஐ. ஓ. சி. நிறுவனம் நிராகரித்துள்ளது.*

*இலங்கை மின்சார சபைக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று மின் சக்தி அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது. இந்த கலந்துரையாடலின் போதே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டது.*

*மசகு எண்ணெய் கொள்வனவுக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எதிர்கொண்டுள்ள டொலர் பிரச்னையைத் தாமும் எதிர்கொண்டுள்ளதாக லங்கா ஐ. ஓ. சி. நிறுவனம் இதன்போது சுட்டிக்காட்டியது.*

*இதேவேளை எதிர்காலத்தில் மின் விநியோகத்தில் இடையூறுகள் ஏற்படுமாயின் மின்வெட்டு தொடர்பான அட்டவணை வெளியிடப்படும் என மின்சக்தி அமைச்சர் காமினி லொகே தெரிவித்தார்.*

*இதனிடையே களனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்தில் 63 மெகாவாட்ஸ் மின் உற்பத்தி செய்யும் இயந்திரம் நேற்று மாலை எரிபொருள் பற்றாக்குறையால் நிறுத்தப்பட்டதாக மின்சார சபை அறிவித்துள்ளது.* (ஐ)

## கிளிநொச்சி நூலகத்துக்கு நேற்று அடிக்கல் நாட்டல்



*கிளிநொச்சி, ஜன. 19*

*கிளிநொச்சி பொது நூலகத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் ஆரம்பமானது.*

*கரைச்சி பிரதேச சபையினால் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள இந்த நூலகம் கிளிநொச்சி நகரின் ஏ-9 வீதியில் அமையவுள்ளது. இந்த நூலகத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் யாழ். இந்திய துணைத் துதுவர் ராம ராஜேஸ், பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

*கிளிநொச்சி பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாட்டினை தொடர்ந்து கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அதிதிகள் விழா இடம்பெற மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் இடம்பெற்றதை தொடர்ந்து அடிக்கல் நாட்டப்பட்டது.*

*கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் வேழ மாலிகிதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சமய தலைவர்கள், யாழ் இந்திய துணைத் தூதுவர் ராம ராஜேஸ், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், அதிபர்கள், பிரதேச சபை செயலாளர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மக்கள் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டி வைத்தனர்.* (அ)

# மரண அறிவித்தல்



மலர்வு 27 - 11 - 1939

உதிர்வு 17 - 01 - 2022

## திருமதி மனோகரி பியற்றிஸ் மேரி வணசிங்க

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரி பியற்றிஸ் மேரி வணசிங்க அவர்கள் 17.01.2022 திங்கட்கிழமை அன்று இறைபாதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற A.G கனகரெட்ணம்(ஆசிரியர், மட்/புனித மிக்கேல் கல்லூரி), திரு S.v. ஜோசப்(சிறிய தகப்பன்- இலிகிதர் நீர்ப்பாசன திணைக்களம்), திருமதி மார்கிரேட் மேரி கருணையம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி D S வணசிங்க தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற D.S.K. வணசிங்க (ஓய்வுபெற்ற அதிபர், முன்னாள் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர்) அவர்களின் அன்பு மனைவியும், மாலினி அற்புதராஜா (ஆசிரியை ஓய்வுநிலை), அன்ரனி நிரஞ்சன் (உரிமையாளர் வணசிங்க அச்சகம் மட்டக்களப்பு), ஜூட் ஜீவன்(பிரித்தானியா), நளினி தேவராஜன் (பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான I T கனகரெட்ணம் (இளைப்பாறிய பிரதி பொலிஸ் மா அதிபர்), மெற்றில்டா ஸ்ரனிஸ்லோஸ், செல்வயோகம் கனகரெட்ணம், அன்புதேவி ஹென்றி, நித்தி கனகரெட்ணம் மற்றும் றீற்றா தேவரஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,மகேந்திரன் அற்புதராஜா(ஒப்பந்ததாரர்), மனோஜா டிலரின் வணசிங்க(ஆசிரியை - மட் அமிர்தகளி ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலயம்), அருள்வேததாசன் தேவராஜன் (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான D S குணபால வணசிங்க, D.S.அமலதாஸ வணசிங்க, சில்வியா நெல்சன், றீற்றா பவளம் கனகரெட்ணம், M. ஸ்ரனிஸ்லோஸ், காலஞ்சென்ற J.N ஹென்றி, பிலோமினா கனகரெட்ணம், ராஜி கனகரெட்ணம் மற்றும் தேவரஞ்சன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், றிச்சி கிறிஸ்ஷாந்த்(பிரித்தானியா), கெனி விரோசன் (பிரித்தானியா), தபீத்தா கத்தி (Bahrain), ஜூடித் பிரியங்கா, நயோமி அக்ஷிக்கா, கெவின்(பிரித்தானியா), ஏட்ரியன்(பிரித்தானியா), மெல்வின்(பிரித்தானியா), டெபோறா (பிரித்தானியா), சங்கீர்த்தன் (Bahrain) ஆகியோரின் பாசமிகு பாட்டியும்,நர்த்தானியல் (பிரித்தானியா), எசேக்கியாஸ்(பிரித்தானியா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

*பார்வைக்கு :*
Wednesday, 19 Jan 2022 12:00 PM - 5:00 PM
Friday, 21 Jan 2022 12:00 PM - 5:00 PM
Saturday, 22 Jan 2022 9:00 AM - 1:00 PM
H L Hawes & Son Ltd 106 Tanners Ln, Ilford IG6 1QE, United Kingdom
Monday, 24 Jan 2022 9:00 AM - 1:00 PM
Home No 47, Bute road, Barkingside, IG6IAF, UK

*திருப்பலி:*
Monday, 24 Jan 2022 1:00 PM - 2:00 PM
St Augustine of Canterbury R.C. Church Loudoun Ave, Ilford IG6 1AU, United Kingdom

*நல்லடக்கம்:*
Monday, 24 Jan 2022 3:00 PM
Forest Park Cemetery & Crematorium Forest Rd, Ilford, Hainault IG6 3HP, United Kingdom

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**ஜீவன் - மகன்**
**Mobile : +447368668282**

தகவல்:
**குடும்பத்தினர்.**

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-முகமூடி,பிசா
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை
நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10
திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்-கந்தப்பு
லொகேஸ்வரன்



9.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஒளி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி
(மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி
(மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு